## மகளிர் மாண்பை மேம்படுத்தும்

# பெண்கள் உரிமைகள்




பெண்கள் அமைப்பு

# மகளிர் மாண்பை மேம்படுத்தும் பெண்கள் உரிமைகள்

பகுதி -1

தலைப்பு மகளிர் மாண்பை மேம்படுத்தும் பெண்கள் உரிமைகள்

ஆசிரியர் ச.கீத பொன்கலன்

முதற்பதிப்பு மார்ச் 2013

பக்கம் 45

பிரதிகள் 500

மொழி தமிழ்

அளவு டெமி 1x8

பதிப்பாளர்

லியோ மாாகா ஆஸ்ரம்

121/ 1 புனித தோமையர் வீதி

பண்டாரவளை.

மின்னஞ்சல் santhia_bw@yahoo.com

நிதி அனுசரணை : நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை

அச்சிட்டோர்: **W.A.S. Agency Post Office & Printers**

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | iv-v |
| அணிந்துரை | vi |
| சர்வதேச மகளிர் தினம் | 1-5 |
| மனித மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பான சர்வதேச மற்றம் பிரதேச ரீதியிலான அதிகாரப் பத்திரங்கள் | 5-6 |
| சிறுமிகள் – சிறுவர் உரிமைகள் | 7-16 |
| பெண்களுக்கெதிரான வன்முறைகள் | 16-19 |
| பெண்கள் உரிமைகள்-இலங்கை சட்டத்தினால் பிரகடனப்படுத்தபபட்டவை | 19-23 |
| ஆதோக்கியமும் மீள் உற்பத்தி உரிமைகளும் | 23-26 |
| கருவறையில் இருந்து கல்லறைக்கு | 26-27 |
| வெளிநாட்டு நகர்வு தொழிலாளர் உரிமைகள் | 27-29 |

# முன்னுரை

## "பெண் ஆண்களுக்குப் -பிறப்பை அளித்தாள்

## ஆண்களோ அவளைச் சந்தையில் நிறுத்தினார்"

சட்ட ரீதியாக பெண்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனினும் வருடா வருடம் அதிகரித்துவரும் பெண்களுக்கும் சிறுமியருக்கும் எதிரான வன்கொடுமைகள் , ஆண்களுக்கும் பெண்களுக்குமான உரிமை, சமத்துவ நிலையை அடையவில்லை என்பதை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது.

'பால் நிலைச் சிந்தனை படிப்படியாக ஏற்றம் காண்கிறது' என்பதே 2013ம் ஆண்டு இடம்பெறவுள்ள 102ஆவது சர்வதேச மகளிர் தினத்தின் மையக்கருவாக உள்ளது. இச்சிந்தனை ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தாலும் தங்களது வியர்வையையும், இரத்தத்தையும், கண்ணீரையும் சிந்தி நாட்டின் பொருளாதாரத்தில் ஆண்களை விடவும் கூடிய பங்களிப்பைக் கொடுத்து பெருந்தோட்டத்துறையில், ஆடைத் தொழிற்சாலைகளில், மத்திய கிழக்கு நாடுகளில் உழைக்கும் பெண்களின் சுமைகளும் வன்கொடுமைகளும் அதிகரித்துக்கொண்டு செல்கிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

பால் நிலையும் அபிவிருத்தியும் என்ற சிந்தனையில் இன்று பால் நிலையோடு தொடர்புடைய அனுபவப் பகிர்வு குறைவே காணப்படுகிறது. பெண்கள் தம்மைப்பற்றி எவ்வாறு சிந்திக்கின்றார்கள் (Gender Identity) எவ்வாறு செயற்படுகிறார்கள் (Gender Roles) எவ்வாறு ஆணாதிக்க அமைப்பு முறையில் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள் (Gender Stratification) எவ்வாரெல்லாம் அவர்களது உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதையெல்லாம் பற்றிய விழிப்புணர்வும், தெளிவின்மையும் அற்றவர்களாக அரசியல், சமூக, பொருளாதாரச், சமய அடிப்படையில் ஓரங்கட்டப்பட்டவர்களாக பெணகள் இருந்து வருகிறார்கள். அதிலும் குறிப்பாக பெருந்தோட்ட கிராமிய பெண்களிடத்தில் இந்நிலை அதிகமாகவே காணப்படுகிறது.

இலங்கையிலும் சர்வதேச மட்டத்திலும் பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பல அமைப்புகள் உருவாக்கப்பட்டு காலங்காலமாக போராடி வருகின்றன. இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி 200 நாடுகளில் 'நூறுகோடி பெண்கள் எழுக' என்ற இயக்கம் பெண்களுக்கெதிரான வன்கொடுமைகளை நிறுத்து என்ற நிலைப்பாட்டில் செயற்படத் தொடங்கியுள்ளது. உலகளாவிய ரீதியில் மூன்றில் ஒரு பெண் வாழ்நாளில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் படுகிறாள் என்று புள்ளிவிபரம் கூறுகின்றது. இலங்கையில் 2012ம் ஆண்டு 90

நிமிடங்களுக்கு ஒரு பெண் என்ற அடிப்படையில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டுள்ளாள் என்று சோசலிஸ பெண்கள் சங்கம் கூறியுள்ளது.

பெண்களின் மீது திணிக்கப்பட்டு வரும் பல்வேறு பாகுபாடுகள் , கொடுமைகள் போன்றவற்றிலிருந்து முழு விடுதலைப் பெறுவதற்கு பெண்களுக்கு சமுதாயக் கல்வியும் அவசியம் தேவை என்பதால் மலையகப் பெண்களுக்கு பெண்களின் உரிமைகள் தொடர்பான (50 மணித்தியாளங்கள்) 06 விழிப்புணர்வு செயலமர்வுகள் நடத்தப்பட்டது. இச்செயலமர்வுகளில் பங்குபற்றியவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களையும் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இச்சிறிய கைநூல் பெருந்தோட்டப் பெண்களுக்கு மட்டுமன்றி ஏனைய பெண்களுக்கும் சிறுமியருக்கும் பயனளிக்க வேண்டும். மலையகப் பெண்கள் தமக்கென ஒரு அமைப்பை உருவாக்கி , அறியாமையை தகர்த்தெறிந்து ஆண் பெண் சமநிலையுடைய ஒரு பொதுவுடமைச் சமுதாயம் அமைய குரல் கொடுத்து செயற்பட வேண்டும் என்பதே இச்சிறிய நூலின் குறிக்கோளாக உள்ளது.

"பெண்ணினமே, விழித்தெழு - வெளியுலகைப் பார்!

தடைகளைத் தகர்த்து - இலட்சியத்தை அடைய,

இவ்வுலகை வெல்ல - வீறுகொண்டு எழு"

# அணிந்துரை

உரிமைகள் என்ற ஐந்து எழுத்துச்சொல்லானது சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள், முதியோர் உரிமைகள், மனித உரிமைகள் என வருடத்துக்கு நான்கு தடவைகளாவது எம்மை கடந்து சென்று கொண்டிருக்கின்றன. மலையகத் தமிழர்களாகிய எமது வாழ்வியலில் இவ் ஐந்தெழுத்தின் உண்மையான உள்ளர்த்தங்களும் உத்வேகம் கொண்ட முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளனவா எனின் இல்லை என்பதே பதிலாகும். இல்லை என்ற பதிலே.......... வாழ்க்கையான எமக்கு உரிமைகள் எட்டாக்கனிகளாகவே உள்ளன.

எனினும் இல்லை எட்டாது என்ற வார்த்தைகளை எம் வாழ்விலிருந்து துரத்தி உரிமை பெற்ற மலயகம் எழுக பண்டாரவளையில் அமைந்துள்ள லியோ மார்கா ஆச்சிரமத்தின் தந்தை திரு. கீத பொன்கலன் அவர்கள் சுமார் 40 வருடங்களாக உழைத்து வருகின்றார். மலையகத்தின் இருள் அகன்று ஒளி பிறக்க வழிகாட்டியாக பல வரலாற்று ஆய்வு நூல்கள், ஆலோசனைகள் உரிமை முழக்கங்கள் என பலவேறு வகையான நூல்களை எம் முன் படைத்துள்ளார். அதேபோல் 2013 ஆம் ஆண்டு மகளீர் தின படைப்பான மகளீர் மாண்பை மேன்படுத்தும் பெண்கள் உரிமைகள் என்னும் இச் சிறு நூலை அரிய பல நோக்கங்களுடனான ஆதாரபூர்வமான புள்ளிவிபரங்களை கொண்டு சிறந்த ஆக்கபூர்வமான நூலாக எம்முன் வைத்துள்ளார். பாக்களும் நூற்களும் வழிகாட்டிகள் தான்... வழிகாட்டிகளை எம் விழிகளோடுமட்டுமல்லாது நம் அன்றாட வாழ்வில் நடைமுறையாக கொண்டு வாழ்தலே எமக்கு உய்வைத்தரும்.

மலையகம் மாண்புடன் வீறுபெற்று எழுந்திட என்றும் உடனிருக்கும்

கேகாலை மலர்

(மேகலா சண்முகம்)

# சர்வதேச மகளிர் தினம்

பால் நிலைச் சிந்தனை படிப்படியாக ஏற்றம் காண்கிறது என்பதுதான் 2013ஆம் ஆண்டிற்கான 102ஆவது சர்வதேச மகளிர் தினத்தின் மையக் கருவாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கருத்துக்கு ஏற்ப இன்று பெண்களின் நிலை ஓரளவிற்கு முன்னெற்றம் கண்டிருப்பதற்கு காரணம் 15ஆம் நூற்றாண்டு தொடக்கம் இன்று வரையும் உழைக்கும் பெண்களால் நடத்தப்பட்ட போராட்டங்கள், தியாகங்கள், உயிரிழப்புகள் என்பனவாகும். இந்தச் சரித்திர கண்ணோட்டம் இன்றையப் பெண்களின் அடிமைத்தனத்தை உடைத்தெறிந்து எழுச்சிக்கொண்ட பெண்கள் சமுதாயத்தை உருவாக்குவதற்கு அபைபுகளே ஆணிவேராக உள்ளது என்பதை தெளிவுபடுத்துகிறது. மேலும் உலகமயமாக்கப்பட்ட முதலாளித்துவ சந்தைப் பொருளாதார கொள்கை என்ற அடிமைச் சூழலில் பெண் அடிமைத்தனத்தை தகர்க்கும் போராட்டம் வருங்காலத்தில் எழுச்சிப் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

## சரித்திரக் கண்ணோட்டம்

சில நாடுகளில் 1400 முதல் 1789 வரையில் பெண்ணினத்தின் அடக்கு முறைப்பற்றி மொழிவாரியான உணர்வு இருந்ததாக கூறலாம். 1789ஆம் ஆண்டு பாரீஸ் நகரில் பெண்கள் ஒன்றுசேர்ந்து போராடி, ஆண்களுக்குச் சமமானதாகவும், நியாயமானதாகவும், பெண்களுக்கும் உரிமைகள் வேண்டுமெனவும், வேலைக்கேற்ற ஊதியம், 8 மணிநேர வேலை என்ற கோஷத்துடன் பிரேஞ்சுப் புரட்சியில் ஈடுபட்டனா். இப்பெண்கள் சுதந்திரம் சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கையினூடாக 'வெசயில்' என்ற பட்டினத்தில் பெண்கள் வாக்குரிமை வேண்டுமென்று கேட்டுச்சென்றனர். பின்பு இந்தச் சிந்தனை பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. பிரான்சு நாட்டில் 2ஆவது முடியாட்சியிலிருந்த லூயிஸ் மன்னன் 1878 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி பெண்களுக்கு வாக்குரிமையும், அரச ஆலோசனைச் சபைக் குழுக்களில் இடமளிக்கவும் அனுமதி வழங்கினார்.

மேரி வோர்ஸ்டன் கிராப்ட் 1759 – 1797 காலகட்டத்தில் வாழ்ந்தவர். இவரே பெண் உரிமைக்காக முதன் முதலில் குரல் கொடுத்தவராவார். இவர் 1792இல் 'பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு' (The Vindication of the Rights of Women) என்ற நூலில், பெண் இயக்கம், பெண் விடுதலை, பெண் கல்வி, பெண்களுக்கு சட்டத்தில் தகுந்த வாய்ப்பு, பெண் வாக்குரிமை, பெண் வேலை வாய்ப்பு போன்ற புரட்சிகரமான கருத்துக்களைக் கூறியிருந்தார்.

அமெரிக்க நாட்டின் நிவ்யோர்க் நகரில் உள்ள 'செனக்காபோல்ஸ்' என்ற இடத்தில் 1848இல் நடந்த மாநாடு உலக பெண்ணிய வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். 1857ம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி நிவ்யோர்க் நகரில் ஆடைத் தொழில் மற்றும் ஜவுளித் தொழில் சார்ந்த சுமார் 40 ஆயிரம் பெண்கள் குறைந்த

வேதனம், நீண்ட வேலை நேரம், பொருத்தமற்ற வேலை நிபந்தனைகள் ஆகியவற்றை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்தனர். இதனைத் தொடர்ந்து அமெரிக்காவிலும், எனைய நாடுகளிலும் பெண் தொழிலாளர்களின் போராட்டங்கள் தலைதூக்கலாயிற்று. 1869ம் ஆண்டு பெண்ணிய செயற்பாட்டாளர்கள் பெண்கள் தங்களது உரிமைகளைப் பெறுவதற்கு வாக்குரிமை இன்றியமையாதது என்ற கருத்தைப் பரப்பினர். 1908ம் ஆண்டு நிவ்யோர்க் பென்டகன் புகையிலை கம்பெனிகள் மற்றும் தொழிற்சாலைகளில் பெண்கள் சம்பள உயர்வு, பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளை முன்வைத்துத் தெருவில் ஊர்வலம் சென்றனர். 1909ம் ஆண்டு ஆடைத் தொழிற்சாலைகளில் 20 ஆயிரம் பெண் தொழிலாளர்கள் நிவ்யோர்க் நகரில் வேலை நிறுத்தம் செய்தனர். இவ்வேலை நிறுத்தப் போராட்டம் இரண்டு மாதங்கள் நீடித்தன. வேலை நிறுத்தத்தின்போது பலர் கைதுசெய்யப்பட்டனர். எனினும் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. இதே காலக்கட்டத்தில் ஐரோப்பிய நாடுகளிலும் பெண் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பெண்களுக்கான அரசியல் சமத்துவம், வாக்குரிமை, சம வேலைக்கச் சம சம்பளம், 8 மணி நேர வேலை போன்ற கோரிக்கைகளை முன்வைத்து சுமார் பத்து இலட்சம் ஆண்/பெண் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்துக்கொண்டனர்.

1909ம் ஆண்டு மார்ச் 8ம் திகதி 120 பெண் தொழிலாளர்கள் ஆண்களுக்குக் கிடைத்த 10 மணி நேர வேலைத் தமக்கும் தேவை என்ற கோரிக்கையை முன்வைத்து ஆலையினுள் போராட்டம் நடத்தினார்கள். முதலாளியோ ஆலைக்குத் தீ வைத்து அங்கிருந்த 120 பேரையும் தீக்கிரையாக்கினான். இந்த நிகழ்ச்சியும் மார்ச் 8ம் திகதியைப் பெண்கள் தினமாக பிரகடனப் படுத்தப்பட முக்கிய காரணமாக அமைந்தது. 1910ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 'கொபண்ஹேகன்' நகரில், சர்வதேச பெண்கள் சோசலிச அமைப்பு ஒரு கூட்டத்தினை நடாத்தியது. அக்கூட்டததில் 1837ம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தத்தை நினைவு கூறும் வகையில் வருடந்தோறும் அத்தினத்தைச் சர்வதேசப் பெண்கள் தினமாகக் கொண்டாட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

ஆரம்பக் கால கட்டத்தில் இது சோசலிச அரசியல் நிகழ்வாகவே ஆரம்பமானது. 1917ல் ரஷ்யப் புரட்சியின் பின்னர் கம்யூனிஸ, சோசலிச நாடுகளில் பெண்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பெண்கள் தங்களது உரிமைகளை அறிந்திருக்கவும், தங்களது சக்தியைப் பாவித்து தங்களது எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானிக்கவும் தெரிந்திருக்க வேண்டுமென உறுதிசெய்தனர். இதற்காக ஏறக்குறைய இன்று 27 நாடுகளில, கூடுதலாகச் சோசலிச கமயூனிச நாடுகளில், இத்தினம் விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. சார்க் நாடுகளில் ஆப்கனிஸ்தானில் இத்தினம் விடுமுறை தினமாகவும் நேபாள நாட்டில் பெண் தொழிலாளருக்கு விடுமுறை தினமாகவும் உள்ளது. ஆரம்பத்தில் இத்தினம் சர்வதேச தொழில் புரியும் பெண்கள்

தினமாக நினைவுகூரப்பட்டது. முதலாவது தேசியப் பெண்கள் தினம் அமெரிக்காவில் 1909ம் ஆண்டு பெப்ரவரி 28ல் நினைவுகூரப்பட்டது. 1911ம் ஆண்டு கொப்பன்ஹேகன் ஏற்பாடு என்ற சொல்லப்படும் உடன்படிக்கையின் பிரகாரம் ஒஸ்ரியா, டென்மார்க்,ஜெர்மனி, சுவிறசலாந்து போன்ற நாடுகளிலிருந்து வாக்குரிமை பொதுத் தாபனங்களில் தொழில்புரியும் உரிமை முதலிய உரிமைகளை வலியுறுத்தி 10 இலட்சத்திற்கும் மேலான பெண்களும் ஆண்களும் பங்குக்கொண்ட ஆரப்பாட்ட ஊர்வலத்தின் பின்னரே சர்வதேச மகளிர் தினம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாம் மகா யுத்தத்தின்போது பெண்கள் ஒன்றிணைந்து யுத்தத்திற்கு எதிராகச் சமாதானத்தை வலியுறுத்திப் போராடினார்கள். ஆதி கிரேக்கத்தில் லிஸ்ட்ராட்டா என்ற இடத்தில் பெண்கள் ஒன்றுசேர்ந்து யத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக ஆண்களுக்கு எதிராக பாலியல் எதிர்ப்பை நடைமுறைப்படுத்தினார்கள்.

## இலங்கையில் பெண்கள்

உலகளாவிய ரீதியில் பெண்களின் சம உரிமைகள் தொடர்பாக முன்னேற்றம் காணப்படுகிறது. ஆனால் தெற்காசியாவில் விசேடமாக இலங்கையிலும் இன, மத, மொழி, பால் கடந்து சகலரும் பங்குபெற வேண்டிய வகையில் அரசியல் பிரதிநிதித்துவம் இல்லை. சகலரும் அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவதை உறுதிசெய்யப்படுவதே ஜனநாயகத்தின் எதிர்பார்ப்பாகும். சார்க் நாடுகள் இதிலொரு முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அண்மையில் இந்தியாவில் 33 வீத அரசியல் பிரதிநிதித்துவம் சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் இதை நடைமுறைப் படுத்துவதற்கு ஆணாதிக்க அரசியலானது தவிர்த்து வருகின்றது. இன்றைய பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களில் 13 பேர்தான் பெண்கள். இது 5.8 ஆகவே உள்ளது. இதில் ஒரே ஒரு தமிழ் பெண்மனிதான் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். எமது நாட்டின் சனத்தொகையில் 52 வீதமானவர்கள் பெண்கள். 56 வீதமான பெண் வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

## ஆசிய நாடுகளுடன் ஒரு ஒப்புநோக்கு

| நாடுகள் | ஆசனங்கள் | பெண்கள் | வீதம் |
|---|---|---|---|
| மாலைதீவு | 77 | 58. | 5 |
| இந்தியா | 543 | 58 | 10.7 |
| பங்களாதேஷ் | 345 | 64 | 18.6 |
| இலங்கை | 225 | 13 | 5.8 |

4

| | | | |
|---|---|---|---|
| பாகிஸ்தான் | 338 | 78 | 22.5 |
| சிங்கப்பூர் | 94 | 23 | 24.5 |
| நேபாலஸ் | 594 | 197 | 33.2 |

சிறுவர் மகளிர் விவகார அமைச்சில் ஆண்கள்தான் அமைச்சராகவும் பிரதிஅமைச்சராகவும் இருக்கின்றனர். அதே போல் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலும் பெண்கள் நியமிக்கப்படுவதில்லை. எமது பாராளுமன்றத்தினால் பெண்கள் ஓரங்கட்டப்படுகிறார்கள்.

2013ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் இந்த அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏனைய அமைச்சுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியுடன் ஒப்பிடும்போது 0.08 ஆகவே உள்ளது. விதவைப் பெண்களுக்காக 77 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. வட கிழக்கில் மட்டும் 89 ஆயிரம் விதவைகள் உள்ள நிலையில் இது விதவைகளின் முன்னேற்றத்திற்கு போதுமானதல்ல.

இந்தியாவைப் போல் இலங்கையிலும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு அனைத்து தரப்பினரும் உறுதியாக செயற்படவேண்டும்.

பெண்களுக்கான மனித உரிமை நிரல் ஒன்றை சீடா ஒப்பந்தம் வரையறை செய்துள்ளது. இதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதை பெண்கள் மசோதாவாக பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதையும் நடவடிக்கைக்கான பீஜிங் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட 12 முக்கிய பகுதிகளையும் 2015 ஆண்டிற்கு முன் மிலெனியம் அபிவிருத்தி இலக்குகளையும் இலங்கை அரசு நிறைவேற்றினால் பெண்கள் ஆரம்பக் கால பெண்நிலைவாத அமைப்பு ஒன்று கூறியதுபோல் 'எமக்கு உண்பதற்கு உணவு மாத்திரமல்ல பூக்களும் தேவையாகும்' அதாவது பெண்களுக்கு உணவும் வேண்டும். சுதந்திரமும் வேண்டும். அதாவது கௌரவமான வாழ்க்கையை வாழக்கூடிய சாத்தியபாடு அவசியம்.

## சர்வதேச மகளிர்தின மையக்கருக்கள்

2013 பால்நிலைச் சிந்தனை படிப்படியாக ஏற்றம் காண்கிறது

2012 கிராமிய பெண்களின் சக்தியை பலப்படுத்துவோம் - பசியையும் ஏழ்மையையும் முடிவுக்கு கொண்டுவருவோம்.

2011 கல்வி பயிற்சி விஞ்ஞானம் தொழில்நுட்பம் ஆகியவற்றில் அனைவருக்கும் சம வழிகள்

2010 சம உரிமைகளும் சமமான சந்தர்ப்பங்களும்: அனைவருக்கும் முன்னேற்றம்

2009 பெண்களும் ஆண்களும் ஒன்றுபட்டு பெண்களுக்கும் சிறுமியர்களுக்கும் எதிரான வன்முறைகளை நிறுத்துவோம்.

2008 பெண்களுக்கும் சிறுமியர்களுக்குமாக முதலீடு செய்வோம்.

2007 பெண்கள் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளுக்கு தண்டனைப் பயமின்மையை முடிவுக்கு கொண்டுவருவோம்.

2006 தீர்மானம் எடுப்பதில் பெண்கள்.

2005 2005இற்குப் பின்னால் பால் சமத்துவம் அதிகப் பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புதல்.

2004 பெண்களும் பாலியல் நோய்களும் , எயிட்சும்.

2003 பாலியல் சமத்துவமும் ஆயிரம் வருடகால அபிவிருத்தி இலக்குகளும்.

2002 ஆப்கான் பெண்கள் இன்று: உண்மை நிலையும் சந்தர்ப்பங்களும்.

2001 பெண்களும் சமாதானமும்: முரண்பாடுகளைச் சமாளிக்கும் பெண்கள்.

2000 சமாதானத்திற்காக ஒன்றுபடும் பெண்கள்.

1999 பெண்களுக்கெதிரான வன்முறைகள் அற்ற உலகம்.

1998 பெண்களும் மனித உரிமைகளும்.

1997 சமாதான மேசையில் பெண்கள்.

1996 கடந்தக் காலத்தைக் கொண்டாடுதலும் எதிர்காலத்திற்காகத் திட்டமிடுதலும்.

1995 ஐக்கிய நாடுகளினால் கொண்டாடப்பட்ட முதலாவது சர்வதேச பெண்கள் தினம்.

## மனித மற்றும் பெண்கள் உரிமைகள் தொடர்பான சர்வதேச மற்றம் பிரதேச ரீதியிலான அதிகாரப் பத்திரங்கள்

- ♦ சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் (1948)
- ♦ சம சம்பள சமவாயம் இல.100 (சர்வதேச மனித உரிமைகள் தாபனம் (1951) பாகுபாடு (வேலை வாய்ப்பும் உத்தியோகமும்) பிரகடனம்இ இல. 111 (1958)
- ♦ சமூகம் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (1966)

- பொருளாதாரம், சமூகம் மற்றும் பண்பாட்டு உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் (1966)
- அவசர காலங்களின் போதும், ஆயுதப் போராட்டங்களின் போதும் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு வழங்குதல் தொடர்பான பிரகடனம் (1974)
- பெண்களுக்கெதிரான அனைத்து விதமான பாகுபாடுகளையும் இல்லாதொழித்தல் தொடர்பான சமவாயம் (1979) விருப்பத்திற்கு இடப்பட்ட குறிப்புப் பத்திரம்(1999)
- சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற கொடூர அல்லது தரங்குறைந்த செயல்களுக்கு எதிரான ஐ.நா.சமவாயம்(1984)
- சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் (1989)விருப்பத்திற்கு உட்பட்ட குறிப்புப் பத்திரம்(2000)
- வியன்னா பிரகடனம் (1993)
- சனத்தொகையும் அபிவிருத்திக்குமான சர்வதேச மாநாடு (1994)
- நடவடிக்கைக்கான பீஜிங் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டவை
- பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தவிர்த்தல் தொடர்பான பிரகடனம் (1993)
- பெண்கள் அமைதி தொடர்பான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1325 – (2000)
- பொதுச்சபை (A/56/863): அமைதி நடவடிக்கைகள் தொடர்பான விசேட குழு அறிக்கை (பிரகிமி அறிக்கை) – (2000).
- எல்லா விதமான இனப் பாகுபாடுகளையும் இல்லாதொழித்தல் தொடர்பான சர்வதேச பிரகடனம் (1969)

## மிலெனியம் அபிவிருத்தித் இலக்குகள் - 2015 வரை நடைமுறையிலிருக்கும்

1. கடுமையான பஞ்சத்தையும் பட்டினியையும் இல்லாதொழித்தல்
2. பொதுவான ஆரம்பக் கல்வியினைப் பெற்றுக்கொள்ளல்
3. பால் சமத்துவத்தை ஆதரித்து பெண்களை சக்திமிக்கவராக்குதல்
4. சிறுவர் இறப்பு வீதத்தைக் குறைத்தல்
5. தாய் நல சுகாதாரத்தினை முன்னேற்றுதல்
6. எச்.ஐ.வீ ,எயிட்ஸ் , மலேரியா மற்றும் வேறு நோய்களுக்கு எதிராகப் போராடுதல்
7. சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிசெய்தல்
8. உலகமய கூட்டு அபிவிருத்தியினை அதிகரிக்கச் செய்தல்

## நடவடிக்கைக்கான பீஜிங் மாநாட்டில் கவனிக்கப்பட்டுள்ள 12 முக்கிய பகுதிகள்

(Beiging Platform for Action(BPFA)

1. பெண்களும் பஞ்சமும்
2. கல்வியும் பெண்களுக்குப் பயிற்சியும்
3. பெண்களும் ஆரோக்கியமும்
4. பெண்களுக்கெதிரான வன்முறைகள்
5. பெணகளும் ஆயுதப் போராட்டமும்
6. பெண்களும் பொருளாதாரமும்
7. சக்திமிக்கதும் தீர்மானம் எடுப்பதிலும் பெண்கள்
8. பெண்கள் முன்னேற்றத்திற்கான நிறுவன அமைப்பு முறை
9. பெண்களுக்கான மனித உரிமைகள்
10. பெண்களும் ஊடகங்களும்
11. பெண்களும் சுற்றாடலும்
12. பெண் பிள்ளை

# சிறுமிகள் – சிறுவர் உரிமைகள்

சர்வதேச தினம், உலக தினம், தேசிய தினம், என அநேக நாடுகளில் நினைவூட்டும் தினங்கள் கொண்டாடப்படுகின்றன. இந்த நினைவு தினங்கள் ஏன் உருவாக்கப்பட்டன? அதாவது விசேடமாக 1980குப் பின் உலகமயமாக்கப்பட்ட முதலாளித்துவ சந்தைப் பொருளாதார கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூக, சமய, அரசியல், பொருளாதார அமைப்பு முறைகள் சமூகத்தில் மூன்றில் இரண்டு வீதமான மக்களை அரை அடீமை நிலைக்குத் தள்ளிவைத்தன. இவ்வாறு அடிமைப்படுத்தப்பட்ட பிரத்தியேக மக்களுக்கு விசேட கவனஞ்செலுத்தி அவர்களுடைய பிறப்பு, வாழ்வாதார உரிமைகளப் பாதுகாப்பதற்காகவே இத்தினங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றில் முதன்முதலாக உருவாக்கப்பட்டதுதான் தொழிலாளர் தினமகும், அடுத்து மகளிர் தினம். ஏனைய தினங்கள் இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பிறகுதான் உருவாக்கப்பட்டன. இவற்றுள் முக்கயமானதுதான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சாசனம் - 1948. இதற்குப் பின்புதான் ஏனைய தினங்கள் உருவாக்கப்பட்டன. இன்று இதில் இரண்டு பிரிவுகள் காணப்படுகின்றன. (1) சர்வதேச தினம், மற்றையது உலக தினம். உதாரணமாக அக்டோபர் 1ம் திகதி – சர்வதேச முதியோர் தினமாகும். 2011 அக்டோபர் 3ஆம் திகதி (அக்டோபர் மாதத்தின் முதலாம் திங்கள்) உலக குடியிருப்பு தினமாகும் (Habitat). இலங்கையில் தேசிய சிறுவர் தினமும் அக்டோபர் 1ம் திகதி நினைவுகூரப்படுகின்றது.

1954 ஆம் ஆண்டு டிசெம்பர் 14ந் திகதிய ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 836(1X) இலக்கத் தீர்மானத்திற்கமைய அனைத்துலக நாடுகளும் சிறுவர்களிடையே நல்லுறவையும் புரிந்துணர்வினையும் ஏற்படுத்தும் முகமாக ஒரு சர்வதேச சிறுவர் தினத்தினை அனுஷ்டிக்க வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டது. ஆனால் சிறுவர் தினம் என்ற கருத்தானது முதன் முதலில் 1925ஆம் ஆண்டு ஜெனீவாவில் சிறுவர் நலன்புரிக்கான சர்வதேச சங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. இது சர்வதேச சிறுவர் தினமாக ஜூன் முதலாம் திகதியை அதிகாரபூர்வமாக அறிவித்தது. ஜூன் முதலாம் திகதியை சர்வதேச சிறுவர் தினமாகத் தெரிவு செய்ததன் நோக்கம் தெளிவாகக் கூறப்படவில்லை. பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு தினங்களிலும் அவற்றிற்காக அநுஷ்டிக்கப்பட வேண்டும் எனவும் ஒவ்வொரு நாட்டிற்கும் பொருத்தமான முறையிலும் அநுஷ்டிக்கப்பட வேண்டும் எனவும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது அரசாங்கங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. 1959ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் சிறுவர்கள் நலனை பாதுகாக்கும் 10 அம்சங்கள் உள்ளடக்கிய சிறுவர் உரிமை பிரகடனம் உருவாக்கிய தினமாகவும் 1989இல் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தை உறுதிப்படுத்திய தினமாகவும் நவம்பர் 20ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சமவாயம் 191 நாடுகளால் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இன்று 21க்கு மேற்பட்ட நாடுகளில் சர்வதேச சிறுவர் தினமானது ஜூன் 1ஆம் திகதி அநுஷ்டிக்கப்படுகின்றது. மேலும் அநேக நாடுகளில் உலக சிறுவர் தினமானது நவம்பர் 20இல் நடைபெறுகிறது. சில நாடுகளில் தேசிய சிறுவர் தினமானது வேறு நாட்களிலும் கொண்டாடப் படுகின்றது. உதாரணமாக இந்தியாவில் சிறுவர் தினமானது மறைந்த பிரதமரான பண்டிட் ஜவகர்லால் நேருவின் ஞாபகார்த்தமாக நவம்பர் 14ஆம் திகதியான அவரது பிறந்த தினத்தன்று கொண்டாடப்படுகின்றது. இலங்கையிலும் கௌத்தமாலாவிலும் சிறுவர் தினமானது அக்டோபர் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வேறு சர்வதேச தினங்களும் உள்ளன. ஜூன் 4ஆம் திகதி (1982) களங்கமற்ற பிள்ளைகளின் சர்வதேச தினமாகும். இது ஆக்கிரமிப்புகளுக்கும் சண்டைகளுக்கும் இலக்கானவர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது. ஜூன் 12ம் திகதி சிறுவர் உழைப்பிற்கு எதிரான சர்வதேச தினமாகும் (உலக தொழிலாளர் தாபனம்). ஜூன் 26ம் திகதி போதைப் பொருள் பாவனைக்கும் தடைசெய்யப்பட்ட பொருட்களின் விற்பனைக்கும் எதிரான சர்வதேச தினமாகும். டிசெம்பர் 10ம் திகதி மனித உரிமைத் தினமாகும். ஆக்டோபர் 11ம் திகதி(2012) சர்வதேச சிறுமியர் தினமாக ஐ.நா.சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

மேலும் சிறுவர்களைப் பாதுகாப்பதற்காக சார்க் நாடுகள் 1991 முதல் 2000ம் ஆண்டு வரை பெண் குழந்தைகளுக்கான தசாப்த சார்க் திட்டமெனவும் 2001 முதல் 2010 வரை சிறுவர் உரிமைகளுக்கான தசாப்த சார்க் திட்டமெனவும் பிரகடனப்படுத்தியுள்ளனர். மிலெனியம் அபிவிருத்தி இலக்குகளில்

குறிப்பிடப்பட்டுள்ள 8 இலக்குகளும் மானுட வர்க்கத்திற்காக இருப்பினும் அடிப்படையில் அவை சிறுவர்களைப் பற்றியதாகும். 2015ஆம் ஆண்டளவில் இந்த இலக்குகள் யாவும் அடையப்படவேண்டியுள்ளன.

## சிறுமியர் சிறுவர் தினத்தின் நோக்கமும் செயற்பாடுகளும்

சிறுவர்களையும் விட சிறுமியர்கள் சமத்துவமற்ற முறையில் கவனிக்கப்படுகிறார்கள். இதனால் அவர்கள் பலவிதமான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு போதிய போஷாக்கில்லை. வீட்டில் பாதுகாப்பான சூழல் இல்லை. புதிய தொழிற்நுட்ப வளர்ச்சியாலும் இவர்கள் பாதிப்புக்குள்ளாகிறார்கள். ஆகவே 18 வயதிற்கு உட்பட்ட சிறுமியரின் உரிமைகளைப் பாதுகாக்க புதிய உத்திகளை முன்வைத்துள்ளது.

- சிறுவர்களிடையே பரஸ்பர புரிந்துணர்வுப் பரிமாற்றலை ஊக்கப்படுத்துதல்.
- சிறுவர்களின் நலன்புரிச் செயற்பாடுகளை ஏற்படுத்தவும் முன்னேற்றம் அடையச் செய்யவும் நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
- தனியார் மற்றும் அரசாங்கத் துறையினிடையே சிறுவர் உரிமை சமவாயம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி, அதனை நடைமுறைபடுத்துதல்.
- விசேடமான கொண்டாட்டங்கள் செயற்பாடுகள் மூலமாகச் சிறுவர்களை மேன்மைப்படுத்துதல்.

பாடசாலைகளும், கல்வி நிறுவனங்கள், தனியார் மற்றும் அரச துறையைச் சார்ந்தவர்களும் சிறுவர் உரிமை சமவாயத்திற்கு ஏற்ப சிறுவர்கள் தங்களது உரிமைகளை அறிந்து கொள்ளும் வகையில் விசேட நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றன. மாணவர்கள் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் பற்றியும் 'உரிமைகள்' என்பதன் மூலம் தாங்கள் கொண்டுள்ள எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கும் ஆசிரியர்கள் தங்களது மாணவர்களைத் தூண்டுகின்றனர்.

சிறுவர் உரிமைகள் தொடர்பான கவனங்களை ஈர்க்கும் பொருட்டும், ஏனையோரும் அறியும் பொருட்டும் ஊடகங்கள், நாடளாவிய ரீதியிலான செயற்திட்டங்கள் ஆகியன ஒழுங்குபடுத்தப்படுகின்றன. யுனிசெப் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைதிட்டத்தில் சிறுவர் தினமும் ஒரு பகுதியாகும். யுனிசெப் நிறுவனத்தின் இலச்சினையில் ஒரு தாயினதும் பிள்ளையினதும் உருவங்களும், பூகோளமும் ஒலிவ் மரக்கிளைகளும் யுனிசெப் என்னும் பதமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இலச்சினையின் அனைத்துப் பகுதிகளும் ஐக்கிய நாடுகளின் நீல நிறத்தில் இருப்பினும் இதை நீல பின்னணியைக் கொண்ட வெள்ளை நிறத்திலும் முன்வைக்க முடியும்.

## தேசிய சிறுவர் தினம்

நாங்கள் இலங்கையிலே அக்டோபர் மாதம் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாகவும் தேசிய சிறுவர் தினமாகவும் கொண்டாடுகின்றோம். இலங்கை அரசானது 1991ஆம் ஆண்டு ஜுலை 12ஆம் திகதி, ஐக்கிய நாடு பொதுச் சபையினால் நிறைவேற்றப்பட்ட சிறுவர் உரிமைகள் சாசனத்தை உறுதிப்படுத்தியது. இதற்குப் பிறகு சிறுவர் பட்டயம் உருவாக்கப்பட்டது. தேவை ஏற்படும்போது சர்வதேச சிறுவர் உரிமை சாசனக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கும் வண்ணம் சிறுவர் உரிமைகளைக் கண்காணிக்கும் தேசிய கண்காணிப்புக் குழுவினது பணிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எமது நாட்டில் சிறுவர்கள் தொடர்பில் புரிகின்ற குற்றங்களைத் தடுக்க பல கடுமையான சட்டங்கள் காணப்படுகின்றன. இதில் குறிப்பாக 1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க தண்டனை சட்டக் கோவை திருத்தச் சட்டம். இதன்மூலம் 16 வயதுக்கு உட்பட்ட ஒருவரை சம்மதத்துடனோ சம்மதமின்றியோ பாலியல் புணர்ச்சி செய்தல் பாலியல் வல்லுறவென குறிப்பிடுகின்றது.

இலங்கையிலே சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் வேண்டுகோளுக்கமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையானது 1999ஆம் ஆண்டு ஜுன்மாதம் பாரா்ளுமன்றத்தில் சட்டமூலமாக (சட்டமூல இல.50 1998) ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. இதன்மூலம் பிச்சையெடுப்பது, ஆபாச வேலைகளில் ஈடுபடுவது, தகாத முறையில் உறவாடுவது, வேலைக்கமர்த்தப்படுவது, போதைப் பொருட்களை விற்பது, கடத்துவது போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளளது. இது தொடர்பாக இலங்கையில் ஜனாதிபதி செயலனிக்ழுவினரும் அமைக்கப்பட்டுள்ளனர். சிறுவர் தண்டனைகளைக் குறிக்கும் சிறுவர் தண்டனைச் சட்டக்கோவை, அரசாங்க குற்றவியல் சேவையின் கீழ் 18 வயதுக்குக் குறைந்த அனைவரும் சிறுவர்கள் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாசனத்துக்கு ஏற்ப இலங்கை அரசானது சிறுவர் உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதற்காக பல்வேறு செயற் திட்டங்களை உருவாக்கியது. அவையாவன: தொழில் திணைக்களம், சிறுவர் நன் நடத்தை பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், சுகாதார அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவனம். இந்த அமைப்புக்கள் மூலமாகப் பலவிதமான செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

2002ஆம் ஆண்டு அக்டோபர் 1ஆம் திகதியன்று சிறுவர் தினத்தைக் குறிக்கும் வகையில் ரூபா 4.50 பெறுமதியான புதிய தபால்தலை ஒன்றை இலங்கை அரசு வெளியிட்டது.

## சிறுவர் தினம் - 2011

"இவர்கள் யாருடைய பிள்ளைகள்? உங்களினதும் எங்களினதும்: நாட்டின் சொத்துக்களைப் போல் இவர்களைப் பாதுகாப்போம்!" என்னும் மையப்பொருளிள் சிறுவர் தினத்தைக் கொண்டாடும் நோக்கத்துடன் மாண்புமிகு ஜனாதிபதி மாளிகையில் கொண்டாட்டம் ஒன்றினை நடத்தியதுடன் பல்வேறு செயற் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் நடைபெற்றன. இலங்கை அரசும், சிறுவர் அபிவிருத்தியும் மகளிர் விவகார அமைச்சின் மூலமாகப் பின்வரும் செயற் திட்டங்களை நடைமுறைப் படுத்தியது.

- தேசிய தினமான 2011ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதியன்று பிள்ளைகளுக்குப் பிரத்தியேகமான ஒரு கொடியினையும், பாடலையும் அறிமுகப்படுத்தல்.
- சிறுவர் தின ஞாபகார்த்த தபால் தலையை வெளியிடுதல்.
- சிறந்த குணமுள்ள பிள்ளைப்பருவம் தொடர்பான நூலினை வெளியிடுதல்.
- நாடளாவிய ரீதியில் ஆபத்தான நிலையில் உள்ள பிள்ளைகளை இனங்காணுவது தொடர்பான ஆராய்ச்சியினை நடத்துதல்
- பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகளை மீளப் பாடசாலைக்குச் செல்ல வைக்கும் ஒரு திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- பிள்ளைகள் மீது பெற்றோரின் கடமைகள் தொடர்பான விழிப்புணர்வுத் திட்டமொன்றினையும், பிள்ளைகளுக்குச் சமூக அபிவிருத்தித் திட்டமொன்றினையும் நடைமுறைபடுத்துவதற்கும் அமைச்சு ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
- 22 பதிவுசெய்யப்பட்ட சிறுவர் இல்லங்களுக்கு நூலக வசதிகளை உயர்த்துதல்.

## சிறுவர்தினம் 2012

'ஒவ்வொரு பிள்ளையும் பாடசாலையில்' என்பது இவ்வருடத்தின் மையக் கருவாகும்.

இலங்கையிலே தற்போது 4 மில்லியன் சிறுவர்கள் இலவச கல்வித் திட்டத்தின் பயன்களை அனுபவித்துக்கொண்டுள்ளனர் என சிறுவர் உரிமை ஆலோசனை வலையமைப்பின் தேசிய செயலாளர் கூறியுள்ளார். இருப்பினும், ஆரம்பக் கல்வியானது கட்டாயமாக்கப்பட்ட போதிலும் 250000 சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாதிருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். 2011ஆம் ஆண்டு பாடசாலை இடைவிலகல் தொகை126000ஆகும். இதில் 60% வட- கிழக்கு, மலையகம் சார்ந்தவர்களாவர். பெருந்தோட்டப் பகதிகளிலுள்ள 8 வீதமான பிள்ளைகள், வலது குறைந்த சிறுவர்கள்,

இவர்கள் மிகவும் குறைந்த வருமானங் கிடைக்கும் குடும்பத்தில் உள்ள பிள்ளைகள், மேலும் பல வீதி வாழ் சிறுவர்களும் பாடசாலைக்குச் செல்வதில்லை. வலது குறைந்த பிள்ளைகளில் 20 வீதமானோர் கல்வியின் பலனை அனுபவிக்கும் அதே வேளை 80 வீதமானோர் விடுபட்டுள்ளனர்.

## சிறுவர் உரிமைகள் மீறப்பட்டுள்ளன

எவ்வாறாயினும், பல்வேறு வகையான சமவாயங்கள், பாதுகாப்புக்கள், தற்கால முறைக்கேற்ற விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் என்பன ஏற்படுத்தப்பட்ட போதிலும், குறிப்பாக உலகமயமாக்கலின் பின்பு சமுதாயத்தில் எதிர்விளைவுகளைத் தோற்றுவிக்கக்கூடிய மாற்றங்களும் ஏற்பட்டுள்ளன. இதன் தாக்கம் சிறுவர்களையும் பாதித்துள்ளது(நுகர்வோர் கலாச்சாரம், முகநூல்). இன்று சிறுவர் உரிமைகளை மீறக்கூடிய செயல்கள் நாளுக்குநாள் அதிகரித்தவண்ணமேயுள்ளன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரச் சபை முதல்வரின் கூற்றுப்படி, 2011ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் முறையிடப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை 398 ஆகும். இச்சிறுவர் துஷ்பிரயோகங்களின் தொகை வருடாவருடம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது. ஏனெனில், அன்பும், அரவணைப்புடனும் கூடிய குடும்பச் சூழல், பாசம், ஆரம்பப்பிணைப்பு, சுகாதாரமும் உடல்நலனுக்கும் உரிய சமூக தாபனங்கள், கற்றல் உலகம், விளையாட்டுக்களுக்கும் வினோதங்களுக்குமான உலகம், சமய தாபனங்கள் ஆன்மீக வள நிலையங்கள் ஆகியவற்றுடனான தொடர்புகள் என்பவை ஒவ்வொன்றும் தத்தமக்கே உரித்தான மனித மேன்மைத் தரங்களைப் பெருந்தொகையான பிள்ளைகளுக்கு வழங்கத் தவறியுள்ளன.

சிறுவர் உரிமை மீறல்களுக்கான அடிப்படைக் காரணங்கள் பொருளாதார அமைப்பு முறையிலிருந்தே தோன்றுவதைக் காணலாம். இலங்கையின் பொருளாதாரம் தேங்கியும், வீழ்ச்சியடைந்தும் காணப்படுவதால், பிற நாடுகளுக்குச் செல்லும் தொழிலாளர்கள், ஆடைத் தொழிலாளர்கள், உல்லாசபயணத் தொழில்துறை ஆகியன பொருளாதாரத்தில் மிகவும் கூடிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டன. வெளிப்படையான உருவும் தோற்றமுங் கொண்ட சௌகரியங்கள் மட்டுமே ஒரு பிள்ளையின் நல்வாழ்க்கைக்குப் பயன்கூட்டாது. அன்பும், பாதுகாப்பும், அன்னையினதும் அயலாரதும் கவனிப்புமே பணத்தையும், சௌகரியத்தையும் விட அதிக பெறுமதிவாய்ந்ததாகும்.

இலங்கையிலே தற்போது 4 மில்லியன் சிறுவர்கள் இலவச கல்வித் திட்டத்தின் பயன்களை அனுபவித்துக்கொண்டுள்ளனர் என சிறுவர் உரிமை ஆலோசனை வலையமைப்பின் தேசிய செயலாளர் கூறியுள்ளார்.

25 வீதமான நீதிமன்ற குற்றச் செயல்கள் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களாகவே உள்ளன. 40000 க்கும் மேற்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் சிறுவர் துர்நடத்தைகளிலும், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளினாலும், பாரிய அபிவிருத்தித் திட்டங்களிற் பணியாற்றும் ஒரு சில வெளிநாட்டவர்களாலும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குப் பலியாகியும் உள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகச் செயல்களின் எண்ணிக்கை – 2009

| | |
|---|---|
| - குறைந்த கவன்மும் பாதுகாப்பும் | 171 |
| - குறைவான கட்டாயக் கல்வி | 101 |
| - கொடூரமாக நடாத்தப்பட்டமை | 328 |
| - கடுமையான பாலியல் வன்முறை | 120 |
| - கடத்தப்பட்டமை | 052 |
| - குடும்ப வன்முறை | 038 |
| - சிறுவர் துஷ்பிரயோகம் | 079 |
| - **மொத்தம்** | **889** |

2012ஆம் ஆண்டு காவல்துறைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் அடிப்படையில் தினமும் 4 சிறு பிள்ளைக்ள வரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஜனவரி 2010 முதல் ஜூன் 2012 வரை சுமார் 2500 சிறுமியர் வயது வந்த ஆண்களால் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்கள். 40000ம் சிறுவர்கள் 2012ஆம் ஆண்டில் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இலங்கையில் 14 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை வேலைக்கமர்த்த முடியாது என்ற சட்டம் இருந்தும் மலையகத்தைச் சோந்த அநேக சிறுவர்கள் வியாபாரத் தளங்களிலும் வீடுகளிலும் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளார்கள். சிறுவர் நன்நடத்தை சேவைகள் நல அமைப்பு 2011இல் 1739 சிறுவர்கள் பெற்றாரால் கைவிடப்பட்டுள்ளனர் என்று கூறுகிறது. குழந்தைகளை அநாதைகளாக்குவது அல்லது கைவிடுவது தண்டணைக்குறிய குற்றமாகும் ஆனால் பெற்றோாகளால் கைவிடப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக எவ்வித சட்ட நடவடிக்கைகளும் இல்லை. உதாரணமாக ஹாலி எல பகுதியில் 2-12 வயதுள்ள 4 பிள்ளைகள் கைவிடபபட்டுள்ளனர். அதேபோல் பண்டாரகம பகுதியில் 4-10 வயதிற்குட்பட்ட 3 பிள்ளைகளும்,பேராதெனிய பகுதியில் 2-11 வயதிற்குட்பட்ட 4 பிள்ளைகளும் கைவிடப்பட்டுள்ளனர்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் வீடுகளிலே உறவினர்களாலும், சிறுவர் இல்லங்களிலே சகபாடிகளாலும், பாடசாலைகளிலும், வேறு தனியார் வாகனங்களிலும் நடைபெறுகின்றன. எனவே சிறுவர் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்களைப் பிள்ளைகளுக்கு நன்கு விளங்க வைக்கும் கடமை பெற்றாரையும், ஆசிரியர்களையும், வளர்ந்தவர்களையும் சார்ந்ததாகும். அத்துடன் பாலியல்

கல்வி தொடர்பான ஆரம்ப அறிவும், ஒரு பிள்ளை தான் கைக்கொள்ளக்கூடிய உடல் வரையறை தொடர்பாகவும் பிள்ளைகளுக்குத் தெளிவுபடுத்தப்படல் வேண்டும்.

பல இளம் யுவதிகள் தாங்கள் தொடர்பு வைத்திருந்த இளைஞர்கள் தங்களுக்கு நல் வாழ்வு அளிப்பதாக கூறிய ஆசை வார்த்தைகளை நம்பி அவர்களுடன் சென்றுவிட்டதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சண்டே லீடர் பத்திரிகையில் கூறியுள்ளார். இருப்பினும், 15 வயதுக்கும் குறைவான இந்த இளம் யுவதிகள் பிறருக்கு விற்கப்பட்டார்களா அல்லது பாலியல் தொழில்களுக்காக இவ்விளைஞர்களால் கடத்தப்பட்டார்களா எனத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சந்தேகிக்கின்றது.

இன்று கூடுதலாக வடகிழக்கில் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் யுத்தம் முடிந்து 4 வருடங்களாகியும் இறுதி யுத்தத்தில் காணாமற் போன ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பற்றிய விபரம் தெரியவில்லை. சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்களால் 600 பேர் வரையில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

## சிறுவர் இல்லங்கள்

நாட்டிலே பதிவுசெய்யப்பட்ட 341 சிறுவர் இல்லங்களும், பதிவு செய்யப்படாத ஏறக்குறைய 70 இல்லங்களும் உள்ளன. மிகவும் அதிகமான இல்லங்களாக 95 சிறுவர் இல்லங்கள் மேல் மாகாணத்திலும், அடுத்ததாகக் கிழக்கு மாகாணத்தில் 76 இல்லங்களும், அடுத்ததாக வட மாகாணத்தில் 71 இல்லங்களும், தென் மாகாணத்தில் 29 இல்லங்களும் உள்ளன. வயது அடிப்படையில் 2 வயதுக்குக் கீழ்பட்ட 153 சிறுவர்களும், 2-5 வயதிற்கு இடைப்பட்ட 577 சிறுவர்களும், 6-16 வயதிற்கு இடைப்பட்ட 10641 சிறுவர்களும், 16-18 வயதிற்கிடைப்பட்ட 1843 பேருமாக சிறுவர்கள் இருந்தனர்.

சுனாமியின் தாக்கத்தின் பின்னரும், கடந்தகாலப் போரின் பின்னரும் சிறுவர் இல்லங்களின் தொகை அதிகரித்துள்ளது. வட மாகாணத்திலே அநேகமாகப் போரினாலே அநாதைகளாக்கப்பட்ட 2000 க்கும் மேற்பட்ட பெற்றோர் அற்ற சிறுவர்கள் 71 இல்லங்களிலே உள்ளனர். இவற்றுள் 40 இல்லங்களே பதிவு செய்யப்பட்டவையாகும். கிழக்கு மாகாணத்திலே 3000ம் சிறுவர்கள் 76 பதிவு செய்யப்பட்ட இல்லங்களில் உள்ளனர். இந்த இல்லங்களிற் சிலவற்றிற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவிகள் கிடைத்தபோதிலும், இவ்வில்லங்கள் யாவும் அடிப்படை வசதிகள் குறைந்தவையாகவும், தரங்குறைந்தவையாகவும் காணப்படுகின்றன. எல்லாச் சிறுவர் இல்லங்களும் அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்டிருக்க வேண்டுமென்றாலும், சிறுவர் இல்லங்களுக்குரிய பொதுவான தரங்கள் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. பதிவு செய்யப்பட்ட இல்லங்கள் ஒரு பிள்ளைக்கு ஒரு மாதத்திற்குரிய பராமரிப்பு உதவித் தொகையாக ரூபா

500ஐ பெறுகின்றன. இவ்வாறு அரசினால் வழங்கப்படும் இவ்வுதவித் தொகையானது ஒரு பிள்ளையின் ஒரு வாரத்திற்குரிய உணவுத் தேவைக்கே போதாது.

## பெற்றார் ஆசிரியர் பொதுமக்கள் ஆகியோரின் கடமைகள்

- சிறுவயதிலிருந்தே குழந்தைகளை முழுமையாக வளர்த்து உருவாக்குதல் என்ற பொறுப்பினைப் புரிந்து ஏற்றுக்கொள்ளல்.
- குழந்தைகளுடன் மாறாத அன்புப் பிணைப்பு – உறவினை உருவாக்குதல்.
- குழந்தைகளிடம் மறைந்துள்ள மாபெரும் ஆற்றலை – திறமையை வளர்த்து – ஊக்குவித்து, வெளிப்படுத்த வைத்தல்.
- அவர்களின் வாழ்வில் சந்தோசம் பெற வைத்தல் - நல்வழியில் வாழவைத்தல்.

உணவுப் பழக்கங்களைக் கற்றுக்கொடுக்கவும், இயற்கை உணவான பழங்கள் , தேன் இவற்றின் சுவையில் ஈடுபாடுகொள்ள வைக்கவும் , செயற்கைப் பானங்களைத் தவிர்த்து இயற்கைப் பழச் சாறுகளை அருந்தக் கொடுங்கள். இன்று குழந்தைகள் தொடங்கிப் பெரியவர் வரையும் செயற்கைக் குளிர் பானங்களுக்கு அடிமையாகிவிட்டனர். பட்டி தொட்டி எங்கும் இப்பானங்கள் கொட்டிக் கிடக்கின்றன. இந்தப் பானங்களில் உள்ள ஆபத்தினை அறியாமல் இவர்கள் பருகுகின்றனர். இந்தப் பானங்களில் உள்ள பொஸ்பரிக் அமிலம், சீனி, காபீன், நிறமி மற்றும் வாசனை ஊட்டி ஆகியவை இதிலுள்ளன. துருவைக் கரைக்கும் பொஸ்பரிக் அமிலம் 55 வீதம் உள்ளது. இதனால் கோலாவில் அமிலத்தன்மை 2.6 பி.எச் அளவு ஏறுகிறது. உணவைப் பதப்படுத்தப் பயன்படும் வினிகரும் இதே அளவு அமிலத் தன்மை கொண்டது. கோலாவில் சீனியும், வாசனை ஊட்டியும் சேர்க்கப்படுவதால் வினிகரைவிடச் சுவையாக உள்ளது. இந்தப் பானங்களைக் குடிக்கும்போது பற்கள் பாதிக்கப்படுகின்றன. குழந்தைகள் இப்பானங்களைப் பருகும்போது உடல் எடை அதிகரிக்கின்றது. வயிற்றில் அல்சர் அதிகரிக்கின்றது. எலும்பு தேய்மானத்தை உருவாக்குகின்றது. எனவே பிள்ளைகள் இப்பானங்களுக்கு அடிமையாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும். ஏனென்றால் இப்பானங்கள் குடிப்பதால் உடலுக்கு எதுவிதமான நன்மையுமில்லை. இதனால் வீண்செலவும் உடல் உபாதைகளுமே ஏற்படுகின்றன.

மகிழ்ச்சியான குழந்தையை உருவாக்க வேண்டுமென்றால் - பிள்ளைகளின் அறிவை – திறமையை வளர்த்து – தன்னம்பிக்கை – தன்மதிப்பு – முழுமையாக ஊட்டி – அவர்களை முழு மனிதர்கள் ஆக்கத் துணைபுரிவது பெற்றோர், ஆசிரியர், சமூகம் , அரசு என்பவற்றின் கடமையாகும். **குழந்தைகள் வெற்றியாளர்களாகப் பிறப்பதில்லை: உருவாக்கப்படுகிறார்கள்.**

இலங்கையில் அக்டோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினமும் தேசிய சிறுவர் தினமும் ஒன்றாக நினைவுகூரப்படுவது பொருத்தமற்றதாகும். முக்கியத்துவம் வாய்ந்த இவ்விரு சாராரும் தனித்தனியே நினைவுகூரப்படுவது சாலச் சிறந்ததாகும். எனவே அக்டோபர் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினத்திற்காக ஒதுக்கிக்கொண்டு தேசிய சிறுவர் தினத்தை சர்வதேச சிறுவர் தினமான நவம்பர் 20 ஆம் திகதியே நினைவுகூறப்படுவது பொருத்தமாகும். ஏனென்றால் எமது நாட்டிலும் பார்க்க ஏனைய சில ஆசிய நாடுகளில் சிறுவர்களுக்கான உரிமை மிக மோசமாக மறுக்கப்படுகிறது. அவர்களுக்காகவும் குரல் கொடுப்பதற்கு இது பொருத்தமாக அமையும். இதனைச் சிறுவர் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்களும் அரசாங்கமும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது எமது வேண்டுகோளாகும்.

அட்டன் டிக்கோயா போடைஸ் தோட்டத்தைச் சேர்ந்த 14 வயது பாடசாலை மாணவி ஒருவர் 26.12.2012 அன்று தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். காரணம் தெரியவில்லை. தாய் வெளிநாட்டில் இருக்கும்போது தந்தை மரணமடைந்துள்ளார். இரண்டு சகோதரர்களைக் கொண்ட இவர் அத்தையின் பராமரிப்பில் வாழ்ந்து வந்தார். தினக்குரல் 28.12.2012

# பெண்களுக்கெதிரான வன்முறைகள்

பாலியல் வல்லுறவு, வன்புணர்வு கொலைகள், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன இன்று பெருமளவில் அதிகரித்துள்ளது. இணையம் சார் ஊடகங்களும் செய்தித்தாள்களும் இவ்விடயங்களை முன்னிலைப் படுத்தி வருகின்றன. அறிவும் கல்வியும் நாகரீகமும் வளர்ச்சியடைந்துள்ள மனித சமுதாயத்தில் பாலியல் குற்றங்கள் ஆதிக்கம் செலுத்துவது ஆரோக்கியமானதல்ல.

தென் அமெரிக்காவில் டொமினிக்கன் குடியரசு நாடான கொலம்பியாவில் ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ச்சி செய்த இரு சகோதரிகள் 1961ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி கொலைச் செய்யப்பட்டனர். அக்கொடூர சம்பவத்தை நினைவுகூரவும் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிக்கவும் இத்தினம் வருடா வருடம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் நவம்பர் 25ம் திகதி முதல் டிசம்பர் 10ம் திகதி வரை பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிராக செயற்படுகின்றன. செயற்திறன் கொண்ட இந்த 16 நாட்களில் பெண்களுக்கெதிரான வன்கொடுமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

“ வீட்டுச் சமாதானத்திலிருந்து உலக சமாதானத்திற்கு : இராணுவமயத்திற்கு சவால் விடுவோம் வன்முறையை முடிவுக்கு கொண்டு வருவோம்” என்பதே

2012 ஆம் ஆண்டில் உலக வன்முறை தினத்தின் மையக்கருவாக இருந்தது. இலங்கையை பொருத்தவரையில் இது ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஏனென்றால் உள்நாட்டு போரும் அதைத் தொடர்ந்து இன்றும், பெண்களும் சிறுவர்களும் பாலியல் வன்முறைகளுக்கு பலியாகி வருகிறார்கள். போரினால் பாதிக்கப்பட்ட இடங்களில் வசிக்கும் 16-17 வயதிற்குட்பட்ட இளம் பெண்கள் தாய்மையடைவது உடல் உள ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஐ.நா.பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1325இன் படி "பெண்களின்,சிறுமிகளின் விசேட தேவைகளை அறிந்து அவர்கள் நாடு கடத்தப்படும்பொழுதும்,மீள் குடியேற்றம் செய்யப்படும் போதும், மீள் குடியேற்றம் செய்யும் போதும், புணர்நிர்மானம் செய்யும் போதும், மீள் ஒன்று சேர்க்கும் போதும், போருக்குப் பின் மீள கட்டுமானத்தின் போதும் பால் நிலைச் சிந்தனையோடு நடைமுறைப்படுத்த வேண்டும்." இதை இலங்கை அரசு சட்டப்பூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது. இன்று வட கிழக்கில் மட்டுமல்ல இலங்கையின் ஏனையப் பகுதிகளிலும் இந்நிலைமையை காணக்கூடியதாக உள்ளது. இதற்கு வறுமை, குடும்பப் பாதுகாப்பின்மை, கல்வி அறிவின்மை என்பன காரணமாக அமைந்துள்ளது. வயது காரணமாக விவாகப் பதிவைச் செய்யமுடியாமல் திருமண பந்தத்தில ஈடுபடும் இளம் பெணகளுக்கு ஆதரவளிக்கும் பெற்றோரும் இந்நிலை தொடர்வதற்கு காரணமாகிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை. பாடசாலை இடை விலகல் நிலையிலும் இதன் தாக்கம் காணப்டுகிறது.

அதற்கு நிகராக குடும்ப வன்முறைகளும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. 1995 ஆம் ஆண்டு தண்டனை கோவைச் சட்ட மாற்றமும், 2005ஆம் ஆண்டு குடும்ப வன்முறைக்கு எதிரான சட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. குடும்ப வன்முறையை தடுப்பதற்கான செயற்திட்ட சட்டம் 2005. ஆனால் இந்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஏனைய சட்டங்கள் மாற்றப்பட வேண்டும். உதாரணமாக சாட்சிகள் கட்டளைச் சட்டமும் குற்ற நடவடிக்கை சட்டத்தொகுப்பும். பெண்கள் மீதான வன்முறைத் தடுப்பு தொடர்பாக வியன்னா சாசனத்தில் 1993ஆம் ஆண்டு இலங்கை கைசாத்திட்டுள்ளது .இதனால் பெண்கள் மீதான சகல வன்முறைகளையும் களைவதற்கு இலங்கை அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது. இலங்கை காவல் துறை திணைக்களத்திற்கு கீழும் பிரதேச செயலகங்களிலும் பெண்கள் சிறுவர்களுக்கான பிரிவுகளை அமைத்து வன்முறைகளைத் தடுக்க பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. எனினும் பெண்கள் தொடர்பான வன்முறைகள் கனிசமான அளவில் வெளிவருவதில்லை.

இலங்கையில் ஜனவரி 2012 முதல் செப்டெம்பர் வரை 97 பெண்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.15 பெண்கள் மீது கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.248 பெண்கள் மீது பாலியல் வல்லுறவு 331 பெண்களுக்கு கடுங்காயங்கள் விளைவிப்பு போன்ற கடுமையான குற்றங்கள் பதியப்பட்டுள்ளன. 2380 பெண்கள் மீது பாலியல் வன்முறை குற்றங்கள் பதியப்பட்டுள்ளன. 2380 பெண்கள் மீது சிறு காயம் விளைவித்தல் 134

பயமுறுத்தல் சம்பவங்கள் 281 பெண்கள் மீது குடும்ப வன்முறை போன்ற 4929 குற்றங்கள் புரியப்பட்டுள்ளன.

பெண்கள் இ16 வயதுக்கு உட்பட்ட சிறுமியர் மீதான பாலியல் வன்முறைக் குற்றங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| வருடம் | 2008 | 2009 | 2010 | 2011 |
| வன்முறைகள் | 1530 | 1624 | 1854 | 1920 |

பதிவாகியுள்ள குற்றங்களின் எண்ணிக்கையை பார்க்குமிடதிதில் இவை வருடா வருடம் அதிகரித்துக்கொண்டு போவதையே காணமுடிகிறது.

சுற்றுலாப் பயணிகளாக வருகின்ற வெளிநாட்டினரும் இந்த வன்கொடுமைகளுக்கு பலியாகின்றனர். ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த 25 வயது நிரம்பிய இளம் பெண்ணொருவர் ஜனவரி 30ஆம் திகதி சிலாபம் இரணவிலக் கடற்கரையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.

இந்தியாவின் தலைநகர் தில்லியில் டிசம்பர் 16ம் திகதி ஓடும் பேருந்தில் வைத்திய மாணவியின் மீது ஒரு கும்பலால் அரக்கத்தனமாக நடத்தப்பட்ட வன்புணரல் பெண்ணினத்தையே துடித்தெழ வைத்தது. சிகிச்சை பலனின்றி இரண்டு வாரங்களுக்குப் பின அவர் உயிரிழந்தார். இச்சம்பவம் பல நாடுகளிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழக முதல்வர் பாலியல் வன்முறைகளுக் எதிராக கடுமையான சட்டங்களை அமுல்படுத்த வேண்டும் என்றும் இக் குற்றங்களில் ஈடுபடும் ஆண்களுக்கு வேதியல் முறையிலான ஆண்மை இழப்பைச் செய்வதுடன் அதிகபட்ச தண்டனையாக மரண தண்டனை விதிக்க வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார். இச்சம்பவத்திற்குப் பின் இலங்கை மகளிர் விவகார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் பொதுப் பேருந்துகளில் புகைப்பட கருவிகள் பொருத்தப்படும் எனவும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பான சட்டங்கள் வலுப்படுத்தப்படும் எனவும் கூறியுள்ளது.

## பாலியல் வன்முறை

இன, மத, வயது, வாழும் இடம், தொழில், திருமணம் என்ற எந்த வித்தியாசமுமின்றி வாழ்நாளில் எவருக்கும் எப்போதும் ஏற்படக்கூடிய ஒன்றாக எல்லையற்று வியாபித்துள்ளதான பாலியல் வன்முறை உள உடல் ரீதியாக தீங்கை விளைவிக்கக்கூடியது. ஆண்டாண்டு காலமாக ஆண்களை மையப்படுத்தியே உருவாக்கப்பட்டுள்ள சமூகக் கட்டமைப்பில் பெண்கள் பலவீனமானவர்களாக,இலகுவில் பாதிப்படையக்கூடியவர்களாக சித்தரிக்கப்பட்டுள்ளது. மதமும் கலாச்சாரமும் சமூக நிறுவனங்களும் இந்நிலைமைக்கு வலு சேர்ப்பதால் பாலியல் வன்முறை கட்டுக்கடங்காமல் இருந்து

வருகிறது. கடுமையான சட்டங்களால் மாத்திரம் இதனைக் கட்டுப்படுத்த முடியாது சமூகம் மாற வேண்டும். பெண்களுக்கெதிரான சிறுமியர்களுக்கெதிரான வன்முறைகளை சமூகம் வெறுமனே ஒரு செய்தியாக உணர்ச்சியற்றுப் பார்க்கிறது. தத் தமது வாழ்வு பத்திரமாக இருக்கிறதா அது போதும் என்ற மனோபாவத்தில் மௌனம் சாதிக்கின்றது. இலங்கையில் 60 வீதமான பெண்கள் வீட்டு வன்முறையால் பாதிக்கப் படுகிறார்கள். நாளொன்றுக்கு ஐந்து பேர்களென பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தபடுகின்றார்கள். இதை ஒரு அவமானமாக சமூகம் பார்க்க மறுக்கின்றது என்பதே துரதிஷ்டம்தான். சமூக மாற்றம் என்பது ஒவ்வொருவரது மனதிலும் ஏற்பட வேண்டும் குடும்பத்தில் ஏற்பட வேண்டும்.பெண்களும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள உள்ளார்ந்த மனமாற்றத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். புதிய யுத்திகளைக் கையாண்டு வன்முறைகளுக்கு உள்ளாகாமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

## பெண்கள் உரிமைகள்-இலங்கை சட்டத்தினால் பிரகடனப்படுத்தபட்டவை

- இலங்கை அரசியலமைப்பின் 12(2) உறுப்புரையானது ஆண்கள் பெண்கள் என்று எல்லோருக்கும் சட்டத்தின் முன் சமத்துவத்தை விளம்புகின்றது. பாலடிப்படையில் பாரபட்சம் எதுவும் செய்யப்படக்கூடாது.
- ஆனால் வழக்கத்தில் பொதுச் சேவையிலும் கூட்டுத்தாபனங்களிலும் உயர் பதவிகளுக்கு நியமனங்கள் செய்கையில் ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.
- ஆண்களும் பெண்களும் வாக்குரிமை தொடர்பிலும் அரசியல் உரிமைகள் தொடர்பிலும் சம உரிமைகளையே துய்க்கின்றனர். ஆனால் நடைமுறையில் பெண்கள் சமவாய்ப்புகளைப் பெறுவதில்லை.
- திருமணமான பெண்ணொருவர் தனது சொந்தத்தில் வருமானம் எதுவும் இல்லாதவரானால் அத்திருமணம் நிலைத்திருக்கும் வரையில் தனது கணவனிடமிருந்து பராமரிப்புப் பெறுவதற்கு உரிமையுடையவனாகிறான். விவாகரத்து வழக்கொன்றில் பெண் வாதியாக இருப்பினுஞ்சரி பிரதிவாதியாக இருப்பினுஞ்சரி அவள் வழக்குக்கான செலவையும் வழக்கு முடியும் வரையிலான தாபரிப்புச் செலவையும் கணவனிடமிருந்து பெறுவதற்கு அவளுக்கு உரிமையுண்டு.
- இறந்துபோன பொதுச்சேவை ஊழியர் ஒருவரின் விதவையானவள் விதவைகள் அனாதைகள் சேமலாப நிதியத்தின் நலன்களுக்கு உரித்துடையவளாவாள்.
- நாட்டின் பொதுச்சட்டத்தின் கீழ் சொத்துறுதியற்ற வழியுரிமைபயில் பாலடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுவதில்லை. ஆணொருவன் இறுதி விருப்பாவணத்தை விட்டு இறக்காத பட்சத்தில் விதவையானவள் அவனது ஆதனத்தின் அரைப்பகுதியை வழியுரிமையாகப் பெற மறுபகுதியை

அவனது பிள்ளைகள் ஆண், பெண் என வேறுபாடின்றி சமபங்குகளாகப் பெறுகின்றனர். கண்டியர் சட்டம், முஸ்லீம் சட்டம் போன்ற ஆள்சார் சட்டங்களின் கீழ் வித்தியாசமான கோட்பாடுகள் ஏற்புடையதாகும்.

- பெண்ணொருவர் தனது ஆதனத்தைத் தான் விரும்பியபடி விற்கமுடியும். தனது மனைவியின் ஆதனங்கள் மீது கணவனுக்குக்க குறிப்பிட்ட சில உரிமைகளைக் கொடுத்திருந்த திருமணமான பெண்கள் ஆதனக் கட்டளைச் சட்டம் தற்போது வலுவிலில்லை.
- கைது செய்யப்பட்ட பெண்ணொருவர் சோதனையிடப்பட வேண்டிய சந்தர்ப்பங்கலிலெல்லாம் அச்சோதனையானது இன்னொரு பெண்ணினால் கண்டிப்பான பண்பு நெறியில் நின்று செய்யப்பட வேண்டும். பெண்ணொருவர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட வேண்டியிருக்கும்போது அவர் ஒரு பெண்ணதிகாரி அல்லது பெண் பொலிஸ் அலுவலரின் கட்டுக்காவலில் வைக்கப்பட வேண்டும்.
- 1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள் இளம் நபர்கள் மற்றும் சிறுவர்கள் ஊழியச் சட்டத்தின் கீழ் பெண்களையும் 18 வயதுக்குக் குறைந்தோரையும் கைத்தொழில் நிறுவனங்களில் இரவுநேர வேலைக்கு அமர்த்துதல் 6 மாத கடுழியச் சிறைத்தண்டனையாலும் தண்டப் பணத்தாலும் தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றமாகும். ஆனால் தற்போது கைத்தொழில் நிறுவனங்களில் பெண்களை இரவு நேரத்தில் வேலைக்கமர்த்துவது 1984ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க பெண்கள் இளம் நபர்கள் மற்றும் சிறுவர்கள் தொழிற்சாலைகள் கடை மற்றும் அலுவலகங்கள் ஊழியர் (ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குப்படுத்தும் திருத்தச்) சட்டத்தினால் சட்டமுறைப் படுத்தியுள்ளது. பெண்கள் இரவில் வேலைக்கமர்த்துதல் என்பது பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்:

(அ) பெண்ணொருவள் அவரது விருப்புக்கு எதிராக இரவில் வேலை செய்யும்படி கட்டாயப்படுத்தப்படக் கூடாது.

(ஆ) இரவில் 10 மணிக்குப் பின்னர் பெண்களை வேலை செய்யும்படி வேலைக்கமர்த்துவதற்கு முன்பாக தொழில் ஆணையாளரது எழுத்துமூல அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

(இ) ஏதாவதொரு நாளில் 6 மணிக்கும் மாலை 6 மணிக்கும் இடையில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் பெண்ணொருவரும் அதே நாளில் இரவு 10 மணிக்குப் பின்னர் வேலைக்கமர்த்தப்படுதல் கூடாது.

(ஈ) இரவில் வேலை செய்யும் பெண்ணுக்கும் அவரது வழக்கமான கொடுப்பனவிலன் ஒன்றரைப் பகுதி செலுத்தப்பட வேண்டும்.

(உ) இரவில் வேலை செய்யும் பெண்களின் நலன்களைக் கவனிப்பதற்கென பெண் அதிகாரிகள் (wardens) நியமிக்கப்பட வேண்டும்.

(ஊ) பெண்களுக்கு வேலைதருநரால் ஓய்வு அறை மலசலகூட வசதிகள் மற்றும் சிற்றுண்டி வசதிகள் வழங்கப்பட வேண்டும்.

(ஏ) ஏதேனும் ஒரு மாதத்தில் பெண்ணெவரும் 10 நாட்களுக்கு மேற்பட்ட இரவு வேலையில் வேலைக்கமர்த்தப்படக் கூடாது.

- கைத்தொழில் நிறுவனங்களில் பெண்களை இரவுநேர வேலைக்கமர்த்தல் என்பது சுதந்திர வர்த்தக வலயங்களிலும் ஆடையுற்பத்தித் தொழிலிலும் உள்ள வெளிநாட்டு முதலீட்டாளரின் நன்மைக்காகவே அனுமதிக்கப்பட்டிருப்பினும் இந்த நிபந்தனைகள் எதுவுமே அவர்களால் பின்பற்றப்படுவதில்லை.
- 1937ஆம் ஆண்டின் பெண்களை சுரங்கங்களில் வேலைக்கமர்த்தும் கட்டளைச் சட்டமானது எந்த வயதுப் பெண்ணும் ஏதேனும் சுரங்கத்தில் ஏதேனும் நிலவடி வேலையில் வேலைக்கமர்த்தப்படுதலைத் தடைசெய்கின்றது. ஆயினும் முகாமைப் பதவி வகிப்பவர்கள் அல்லது சுகாதார –சமூக சேவைகளிலுள்ளவர்கள் அல்லது கற்கைப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் இதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். இன்று இந்தச் சட்டங்களை மாற்றி பெண்கள் ஆண்களைப் போல் ஈடுபட வேண்டும் என்று கூட்டாண்மை கம்பெனிகள் அரசிடம் கேட்டுள்ளது. ஆனால் இதற்கு தொழிற் சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.
- 1981 ஆம் ஆண்டின் 52ஆம் 53ஆம் இலக்கங்கள் கொண்ட சட்டத்தினாலும் 1985ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான பிரசவகால நலன்கள் கட்டளைச் சட்டத்தினால் பெண்களின் பிரசவகால நலன்களுக்கான உரிமைகள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.
- ஒரு பெண்ணே அவரது பிரசவத்தினை உடனடுத்த நான்கு வாரங்களுக்கான எக்காலப்பகுதிக்கும் தெரிந்து கொண்டே வேலைத்தருநர் ஒருவர் வேலைக்கமர்த்தக்கூடாது.
- பிரசவ விடுமுறையானது 12 வாரங்களுக்காக முதலாம் இரண்டாம் பிள்ளைகளது பிரசவத்தின் முன்னர் இரு வாரங்களுக்கும் பின்பாக 10 வாரங்களுக்குமாகக் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- மூன்றாவது அல்லது அதன் பின்ரான பிள்ளைக்காக 6 வார பிரசவ விடுமுறை கிடைக்கக் கூடியதாதல் வேண்டும்.
- பெண்ணொருவர் பிரசவத்துக்கு உடனடுத்து முந்திய ஒரு வருட காலத்திற்குள் 150 நாட்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு ஒரு வேலைத்தருநரின் கீழ் வேலை செய்திருந்தால் மட்டுமே பிரசவ நலன்களுக்கு உரித்துடையவராக முடியம்.
- பெண்ணூழியர் ஒருவர் தனது பிரசவத்துக்கு ஒரு மாதம் முன்னதாகவும் பிரசவத்திற்கு பின்னர் ஒரு வாரத்திற்குள்ளாகவும் வேலைத்தருநருக்கு அறிவிப்புச் செய்ய வேண்டும்.
- கடை மற்றும் அலுவலக ஊழியர்களும் இந்த பிரசவ நலன்களுக்கு உரித்துடையவராவர்.

- விடுமுறை காலத்துக்கான முழு அளவு ஊதியத்துக்கும் அவள் உரித்துடையவள்
- கர்ப்பத்தின்போதும் அதன் பின்னரும் அவளுக்கு அவளது பிள்ளைக்கு ஊறுவிளைவிக்கக் கூடியதான ஏதேனும் அத்தகைய வேலையில் அவள் வேலைக்கமர்த்தப்படக் கூடாது.
- கர்ப்பம் அல்லது பிரசவம் அல்லது அதையடுத்து விளைவதான ஏதேனும் சுகவீனம் காரணமாக அவளது வேலை முடிவுறுத்தப்படக்கூடாது.
- குறிப்பிட்ட ஒரு தொகைக்கு மேற்பட்ட பெண்கள் வேலை செய்வதான ஏதேனும் தொழிற்துறையின் வேலைத்தருநர் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான பிள்ளைகள் பராமரிப்பு மடுவம் ஒன்றை நிறுவிப் பேணி வரவேண்டும் எனபதுடன் பெண் தொழிலாளர்கள் தமது வேலை நேரத்தில் தமது 5 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை அந்தப் பிள்ளை மடுவத்தில் விட்டுச் செல்வதையும் அனுமதிக்க வேண்டும்.
- ஒரு வயதுக்குக் குறைந்த பிள்ளையை போசித்துவரும் பெண் தொழிலாளி ஒருவர் ஒவ்வொன்றும் அரை மணித்தியாலங் கொண்டதான இரண்டு போசிப்பு இடைவேலைகளுக்கு – 9 மணிநேர சேவையின் எக்காலத்திலாவது உரித்துடையவராவார்
- இந்தப் பிரசவ நலன்கள் நீட்டிப்பானது பொதுச் சேவையிலுள்ள பெண்களுக்கும் கிடைக்கக் கூடியதாக்கப்பட்டுள்ளது.
- கடை மற்றும் அலுவலக ஊழியர்கள்(ஊழியத்தையும் ஊதியத்தையும் ஒழுங்குப்படுத்துதல்)(திருத்த) சட்டத்தின் கீழ் பெண்ணெவரும் கடையொன்றில் ஏதேனும் ஒரு நாளில் மாலை 6 மணிக்கும் காலை 6 மணிக்கும் இடையில் வேலைக்கமர்த்தப்படல் கூடாது. பெண் கடை ஊழியர்களுக்கு ஆசனங்கள் வழங்கப்பட வேண்டும்.
- தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டமானது பெண் வேலையாட்களின் வேலை நேரங்கள், ஓய்வு, மிகை நேர வேலை என்பன தொடர்பாகப் பல்வேறு ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது. வேலைத்தருநர்கள் இந்த ஏற்பாடுகளுக்கு இணங்க ஒழுகுமாறு கேட்கப்படுகின்றனர்.
- எங்களின் தண்டனைச் சட்டக் கோவையானது தொந்தரவு, உடலூறுக்கு எதிரான பாதுகாப்பினைப் பெண்களுக்கு உத்தரவாதப்படுத்துவதற்குக் கருதப்பட்டதான பல ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.
- பெண்ணொருவருடன் அவருடைய விருப்புக்கு மாறாக அல்லது அவரது சம்மதமின்றி அல்லது மோசடியாகப் பெறப்பட்ட அல்லது பலாத்காரத்தின் மூலம் பெறப்பட்ட சம்மதத்துடன் உடலுறவு கொள்ளுதல் 20 வருடங்களுக்கான கடூழியச் சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படக் கூடியனதான பாலியல் வலலுறவுக் குற்றமாகும்.
- 16 வயதுக்குட்பட்ட சிறுமி ஒருவருடன் அவளது சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ உடலுறவு கொள்ளுதல் பாலியல் வல்லுறவாகக் கருதப்படும்.

- பெண்ணொருவரை அவளை மானப்பங்கப்படுத்தும் நோக்குடன் தாக்குதல் அல்லது குற்றமுறையான பலாத்காரம் பாவித்தல் சிறைத் தண்டனை விதிக்கப்பட கூடிய குற்றமாகும்.
- தனது மனைவியை தாக்குவதற்கோ அல்லது உடலூறு விளைவிப்பதற்கோ கணவனுக்கு உரிமை கிடையாது. அவன் அங்கனஞ் செய்யின் அவன் குற்றமுறைப் பொறுப்பாளியாக்கப்பட முடியும்.
- பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் எதிரான குற்றங்களில் தடீர் அதிகரிப்புக் காணப்படுவதனால் பெண்கள் பிள்ளைகள் மீது பாலியல் குற்றங்கள் புரியும் தவறாலிகளுக்குக் கண்டிப்பான தண்டனைகள் வழங்கம் விதத்தில் சட்டத்தை திருத்துவதற்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
- திருமணஞ் செய்வதாக வாக்குறுதியளித்து ஒரு கன்னிப் பெண்ணுடன் ஆடவன் ஒருவன் உடலுறவு கொண்டுவிட்டுப் பின்னர் அவளை மணக்காவிடின் கன்னிமை கெடுத்தல் என்பதற்காக அவன்மீது வழக்கிடவும் அவனிடமிருந்து நஷ்ட ஈடு பெறவும் அப்பெண்ணுக்கு உரிமையுண்டு.

# ஆதோக்கியமும் மீள் உற்பத்தி உரிமைகளும்

ஆரோக்கியம் என்பது உள உடல் என்ற இரு பிரிவுகளை உள்ளடகிகியது. ஒரு மனிதன் தனக்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் கல்வி, தொழில் என்று அனைத்திலுமே தன்னிறைவு அடைந்திருந்தால் மட்டுமே அவன் ஆரோக்கியமுள்ளவானாக கருதப்படுவான் .இன்று 53 வீதமானவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கிறார்கள். அப்படியாயின் அவர்கள் வாழ்வதற்கான சூழலில் இல்லை என்பது தெளிவாகிறது. கடந்தக் காலங்களில் சுகாதாரம் ஒரு உரிமை. இன்று சமூக நல சேவைகளுக்காக வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி ஒப்பீட்டு ரீதியில் கூடுதலாக இருப்பினும் அது போதிய அளவான உயர்வாக கருத முடியாது. அதற்கான காரணங்கள்

நாணய பெறுமதி இறக்கம்

பண வீக்கம்

வாழ்க்கைச் செலவு புள்ளி அதிகரிப்பு

இறக்குமதி பொருட்களின் விலை அதிகரிப்பு

சுகாதார அமைச்சுக்கு 2012இல் 74.5 பில்லியன் ஒதுக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியானது 125 பில்லியன்.

இந் நிதியானது மத்திய அரசின் கீழ் வரும் சுகாதார செலவினங்களுக்கு மட்டுமானது என்பது குறிப்பிடத் தக்கது.

அரச வைத்தியசாலைகள் - 2007ல் 619, 2012ல் 592

தனியார் வைத்தியசாலைகள் - 2011ல் - 3183

வைத்தியர்களின் எண்ணிக்கை 2001ல் 10975, 2012ல் 17271

மருத்துவ தாதிகள்- 2001ல் - 14931 , 2012ல் 29234

சர்வதேச தரத்தின்படி 1000ம் பேருக்கு ஒரு வைத்தியரும் 1.5 மருத்துவ தாதியரும் தேவையாக கணிக்கப்பட்டுள்ளது. அதன்படி பார்ப்போமாயின் இலங்கைக்கு இன்னும் 14000ம் வைத்தயர்களும் 25000ம் மருத்துவ தாதிகளும் தேவைப்படுகின்றனர். இன்று இலங்கையில் பிறக்கும் 10000ம் குழந்தைகளுக்கு 8.5 குழந்தைகள் இறக்கின்றனர். தாய்மார் 100000ம் பிறப்புக்கு 41.6 இறப்பு நிகழ்கிறது இன்று இலங்கையில் தாய்மார் இறப்பு வீதம் குறைக்கப்பட்டாலும் குறை நிறையுடைய குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது. இதற்கான முக்கிய காரணம் கர்ப்பினி தாய்மாருக்குத் தேவையான போசாக்கின்மையை குறிப்பிடலாம். மலையகத்தில் முக்கிய பகுதியான நுவரெலியா மாவட்டத்தில் குறை நிறையான குழந்தைகளின் பிறப்பு 35 வீதமாக கணிக்கப்பட்டுள்ளது.

மீள் உற்பத்தி இதில் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது. மீள் உற்பத்தி தொடர்பாக அறிவும் தெளிவும் பெருவாரியான பெண்களிடத்திலலும் ஆண்களிடத்திலும் குறைவாகவே உள்ளது என்பதை மறுக்க முடியாது. உலக சுகாதார அமைப்பு (WHO) மீள் உற்பத்திக்கு கொடுத்துள்ள வரைவிலக்கணம்- "எல்லா தம்பதியரும் தனி நபர்களும் தங்களுக்கு எத்தனை குழந்தைகள் எந்தெந்த இடைவெளிகளில் தேவை என்பதை சுதந்திரமாக தீர்மானிக்கவும் அப்படிச் செயவதற்கான தகவல்களைப் பெறவும், அதனை நடைமுறைப் படுத்துவதற்கான வழிவகைகளையும், மற்றும் உயர்தரமான பாலியல், மற்றும் கருவள சுகாதாரத்தைப் பெறுவதற்கான உரிமையை கொண்டிருக்க வேண்டும். இந்த தீர்மானங்களை பாகுபாடற்ற, நிர்பந்தமற்ற, வன்முறையற்ற உரிமை அவர்களுக்கு இருக்க வேண்டும்".

சீடா அறிக்கையில் அபிவிருத்தி குறைந்த யுத்தத்தினாலும் போரினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீள் உற்பத்தி சுகாதாரம் தொடர்பில் ஓர் அளவான அறிவும் குறைவான கருத்தடை பாவனைகளும் அதிககளவிலான இளம் கர்ப்பினிகளும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது. இப்பகுதிகளில் குடும்ப திட்டமிடலுக்கான வசதிகள் இல்லை. எச.ஐ.வீ. எயிட்ஸ் பெண்கள் மத்தியில் அதிகமாக காணப்படுகிறது. இக் குழுவின் அறிக்கையின் படி கருகலைப்பு சட்டப்படி குற்றமாகும். ஆனால் ஒரு தாயின் உயிரைக் காப்பாற்ற கரு கலைப்பைச்

செய்யலாம். இரகசிய கருக்கலைப்பு செய்யும்போது 10 வீதமான பெண்கள் இறக்க நேரிடுகிறது என இந்த அறிக்கை கூறுகிறது. இது போன்ற பல கருத்துக்களை இந்த அறிக்கை முன் வைத்திருக்கிறது. இலங்கை யாப்பு கருவள சுகாதாரம் பற்றிக் கூறும்போது சாதி மதம் இனம் பால் அரசியல் கருத்து பிறந்த இடம் என யாதொரு பாரபட்சமும் இன்றி கருவள சுகாதாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை உறுதி செய்துள்ளது.

குடும்பத் திட்டமிடலுக்கு பாதுகாப்பான தரமான கிடைக்கக்கூடிய ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த முறைகளை தெரிவு செய்ய வழிவகை செய்வதே சுகாதாரக் கொள்கையின் கீழ் அரசாங்கத்தின் கடப்பாடாக உள்ளது

ஈந்த எல்லாச் சட்டங்கள் இருக்கும் போதும் மலையகத்தில் 1975இற்குப் பின் அறிமுகம் செய்யப்பட்ட குடும்ப திட்டமிடல் தொடர்பாக தெளிவான கருத்தைப் பெறக்கூடிய சூழலுக்கு மாறாக பெண்களின் கருவளத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பல வேலைத் திட்டங்கள் இரகசியமாக அதே சமயம் மிகவும் தாக்கமுள்ள வகையில் பிழையாக வழிநடத்தப்பட்டுள்ளது. தோட்டங்களில் வசிக்கும் பெண்கள் மீது வலது இடது கருக்குழாய் அடைப்பு (LRT) முறைக்கு உட்படுமாறு நிர்பந்திக்கப்பட்டனர். பல சந்தர்ப்பங்களில் இந்த முறையை அமுல்படுத்துவதில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. பாரபட்சமான நிர்பந்தமான கருத்தடை முயற்சிகள் மனித இனத்திற்கு எதிரான குற்றச் செயல் நகல் சாசனத்தில் குறிப்பிட்டுள்ள இனப்படுகொலை என்ற வரைவிலக்கனத்திற்கு உட்பட்டதாகும். இலங்கை குடும்ப நலத் திட்ட தேசிய கொள்கை சர்வதேச மட்டத்தில் உள்வாங்கப்பட்ட ஒன்றாகும். செயற்பாட்டிற்கான வியன்னா வேலைத் திட்டம் (1993), சீ.டி.பீ.டி கெய்ரோ(1994), நான்காவது உலகப் பெண்கள் மாநாடு – பீஜிங் (1995) அடங்கலாக பல்வேறு சர்வதேச சாசனங்களில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளது. இவற்றில் பின்வரும் திட்டங்களை திட்டவட்டமாக மறுத்துரைக்கின்றது.

குடும்ப திட்டமிடலில் கட்டாயத்தைப் பிரயோகித்தல்

சமூக கொருளாதார ஊக்குவிப்புகள்

கருவளத்தைக் குறைப்பதில் பாரபட்சம் காட்டுதல்

நிரந்தரக் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி ஒருவரைக் கட்டாயப்படுத்தி அவசியமான அறிவித்தலை பெறுவதற்கு இனங்ககவைப்பது coerced sterilization என்பதாகும்

நிரந்தரக் குடும்பக் கட்டுப்பாட்டை செய்த பின்னரே தெரியவருவது forced sterilization எனப்படும். தகுதியுடைய 80 வீதமான பெண்கள் நிரந்தர குடும்பக் கட்டுப்பாடு செய்துள்ளனர். ஆண்களைப் பொருத்தவரையில் 8.5 வீதமானவர்களே நிரந்தர குடும்பக் கட்டுப்பாட்டை செய்துள்ளனர். இது பாரபட்சமான பெண்களுக்கு எதிரான ஒரு செயற்பாடின்றி வேரேதுமில்லை. ஆகவே கருவள உரிமை தொடர்பான

அறிவை அவர்களுக்குத் தெரிந்த மொழியில் கொடுக்க வேண்டும். அவர்களே இதுபற்றி தீர்மானிக்கும் தகுதியை உருவாக்கப்படவேண்டும்.

## கருவறையில் இருந்து கல்லறைக்கு

இன்று அநேக நாடுகளில் கருக்கலைப்பு சட்டபூர்வமாகத் தடைச் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையில் ஐக்கிய அமெரிக்காவில் ஒரு வருடத்திற்கு 1.5 மில்லியன் கருக்கலைப்பு இடம்பெறுகிறது. இலங்கையில் ஒரு நாளைக்கு 700 கருகலைப்பு இடம்பெற்ற வருகிறது. கனிப்பீட்டின்படி ஒரு மாதத்திற்கு 20000ம் கருக்கலைப்பும் ஒரு வருடத்திற்கு 2500000ம் கருக்கலைப்பு சட்டபூர்வமற்றதாக இடம் பெற்று வருகிறது. இந்தப் பிரச்சினையின் தாக்கத்தை உணர்ந்தே ஐ.நா. சபையினால் நவம்பர் மாதம் 11ம் திகதியை பிறக்காத கழந்தைகளுக்கான தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. கருக்கலைப்பைப் பற்றிய விடயத்தில் சார்பான கருத்துகளும் எதிரான கருத்துகளும் பேசப்பட்டு வரும் வேலையில் கருக்கலைப்பு சட்டபூர்வமாக்கப்படாத நிலையே தொடர்கிறது.

கருக்கலைப்பானது பூரண வளர்ச்சியடைந்த கருவை வன்முறையாக கொலை செய்வதாகும். நடைமுறையில் கருக்கலைப்பு விடயத்தில் நடைமுறையில் சில விதி விலக்குகள் உள்ளன. ஒரு தாயின் உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படுவதாக மருத்துவ ரீதியிலான தேவை எற்படின் கருக்கலைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இந்த விதி விலக்கினை சட்டமாக கொள்ள முடியாது.

ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சூழ்நிலையில் அப்பெண் கருவுற்றிருந்தால் அக்கருவை அழிப்பதற்கு அப்பெண்ணுக்கு உரிமை உள்ளதா இல்லையா என்பதுதான் இன்றைய நவீன உலகத்தின் விவாத பொருளாக உள்ளது. இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது ஒரு தனிப்பெண்ணின் சூழலை ஆராய்ந்து எடுக்கப்பட வேண்டிய தீர்மானமே. இதை மருத்துவ ரீதியாக உயிராபத்துக்குள்ளான தாயின் கருவை கலைப்பது போல் பார்க்க முடியும். இவ்வாரான தனிப்பட்ட விதிவலக்குகளை பொதுச்சட்டமாக்க முடியாது. கருவில் உருவாகியிருக்கும் குழந்தைகளுக்கு பாதுகாப்பும் போதிய போசாக்கும் கொடுக்கப்பட வேண்டியது பெண்கள் உரிமைகளில் ஒன்றாகும்.

கருக்கலைப்பை சட்டமாக்கினால் பாலியல் உறவானது விற்பனை பொருளாகவும் போகப் பொருளாகவும் கனிக்கப்படும் இது நுகர்வோர் கலாச்சாரத்தை மேலும் அதிகரிக்கும்.எவ்வகையான சட்டமாக இருப்பினும் தனி மனிதனின் வாழ்வியலை வலுப்படுத்துவதற்காக அன்றி அம்மனிதனை சிதைப்பதற்கோ

கொலைசெய்வதற்கோ அல்ல. ஆகயினால் கருக்கலைப்பானது சமூகத்தில் நிலவுகின்ற அன்பின் தத்துவத்தை இல்லாதொழிக்கிறது.

# வெளிநாட்டு நகர்வு தொழிலாளர் உரிமைகள்

இலங்கைத் திறந்த பொருளாதார கொள்கை உருவாக்கபபட்ட (1977) காலந்தொட்டு இன்றைய உலகமயமாக்கப்பட்ட முதலாளித்துவ சந்தை பொருளாதார கொள்கையின கீழ நாடு விட்டு நாடு சென்று தொழில் வாய்ப்பைத் தேடுவது சர்வ சாதாரண. நிகழ்வாகிவிட்டது.

ஆரம்பக் காலத்தில் படித்த பயிற்சிப் பெற்ற ஆண்களே அதிகமாக வெளிநாடு சென்றனர். ஆனால் இன்று கூடுதலாக கல்வித் தரத்தைப் பூர்த்திச் செய்யாத பயற்சிப் பெற்றிராத இளம் பெண்கள் வீட்டுப்பனிப் பெண்களாக வெளிநாடுகளுக்குச் செல்வது அதிகரித்துள்ளது. இன்று உலகலாவிய ரீதியில் வெளிநாட்டுப் பனிகளுக்காக செல்லும் நபர்களின் எண்ணிக்கை 214மில்லியன் ஆகும். இவ்வெண்னிக்கையானது உலகத் சனத்தொகை கூடிய நாடுகளான சீனா, இந்தியா, அமெரிக்கா, இந்தோனிசியா என்ற நாடுகளின் வரிசையில் 5ஆவது இடத்தை வகிக்கினறது. சர்வதேச தொழிலாளர் அமைப்பான (ILO) அறிக்கையின்படி உலகலாவிய ரீதியில் 100 மில்லியன் வீட்டுப் பனியாளர்களாக பனிப்புரிவதாக கூறப்பட்டுள்ளது இன்று இவர்களது உரிமைகளே மறுக்கப்பட்ட நிலையில் உள்ளது. இவர்களால் தத்தமது நாடுகளுக்கு அனுப்பும் பணம் 335 பில்லியன் பவுண்ட்களாகும். இது 2012ஆம் ஆண்டு உலக உதவித் திட்ட நிதிக்காக ஒதுக்கபபட்ட நிதியை விட மூன்று மடங்கு கூடியதாகும். சர்வதேச தொழிலாளர் அமைப்பானது(ILO) இப்பனியாளர்களின் பிரச்சினைகளை அறிந்து **திருப்திகரமான தொழில் என்ற தலைப்பில்** 11.06.2011இல் 189ஆவது தீர்மானத்தை பிரகடனப்படுத்தி உள்ளது. தமது நாடுகளுக்கு அந்நிய செலாவனியை பெற்றுக் கொடுப்பதால் இந்தோனிசியா ஜனாதிபதி இவர்களை **பொருளாதார வீரர்களாக** வருணித்துள்ளார். அதுபோல் இலங்கை **தேசிய வீரர்களாக** (National Heros) வருணிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இலங்கை ILO தீர்மானம் 180ஐ ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கையில வெளிநாட்டு வேலைவாய்ப்பு பனியகம் உருவாக்கப்பட்டுள்ளது. அத்தோடு இன்னும் 800க்கு மேல் வெளிநாட்டு வேலை வாயப்பு முகவர் நிலையங்கள் உள்ளன. இவர்கள் இதையையே தொழிலாக செய்து வருகிறார்கள. இலங்கையில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அபிவிருத்தி மற்றும் சமூக நல அமைச்சு என ஒரு அமைச்சு உருவாக்கப்பட்டுளளது. இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பனியகத்தின் தலைவரின் கூறறுபடி தனியார் வேலை வாயப்பு முகவரின் ஊடாக வெளிநாடு செல்லும் ஒருவரிடமிருந்து 150 000ம் ரூபாயினை அந்நிறுவனங்கள் இலாபமாகப் பெறுகின்றனர். ஆனால் அரசாங்க வேலை வாய்ப்பு பனியகததில் பனிக்காக

வெளிநாடு செல்லும் ஒருவரை பதிவு செய்வதற்கு 10600 ரூபாயும் பயணச் சீட்டு அனுசரணையாளரிடம் கிடைக்காத பட்சத்தில் ஒருவழி பயணத்திற்கான பயணச் சீட்டுக்கென செலவு 30000ம் ரூபாவையும் வைத்திய சான்றுகள மற்றும் இதர செலவுகளுக்காக 4000ம் ரூபாயும் மொத்தச் செலவாக ரூபா 45000ம் மட்டுமே அறவிடப்படுவதாகவும் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன காப்புறுதி திட்டத்தின் கீழ் இவர்கள பதிவு செய்யப் படுவதோடு பாதுகாப்பிற்கென அந்தந்த நாடுகளில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களில் இதற்கென பனியாளர் ஒருவரை நியமிததுள்ளார்கள் எனவும் இப்பனியகமானது வீட்டுப் பனிப்பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதில்லை எனவும் மனித உரிமை ஆணைக்குழுவுடன் இணைந்துள்ள நாடுகளுக்கே இவர்கள் வேறு பனிகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவும் கூறப்பட்டுள்ளது.

2012ம் ஆண்டு புள்ளி விபரத்தினபடி மேற்காசிய நாடுகளுக்கு கூடுதலான பனியாளர்கள செல்லுகின்றனர்.

மேற்காசியாவிற்கு வீட்டுப் பனிப் பெண்களாக

| | | | |
|---|---|---|---|
| குவைத் | 29066 | ஓமான் | 1985 |
| ஐக்கிய அரபு குடியரசு | 8104 | இஸ்ரேல் | 215 |
| ஜோர்தான் | 5923 | எகிப்து | 5 |
| கடார் | 5727 | ஈராக் | 4 |
| லெபனான் | 3402 | சிறியா | 4 |
| பாஹரேன் | 2193 | வேறு நாடுகள் | 3593 |
| | **மொத்தம்** | **117729** | |

இதில் 42.5 வீதமானவர்கள வீட்டுப்பனிப் பெண்களாவர். வீட்டுப் பனிப் பெண்களில் 96.9பேர் மேற்குறிபபிட்ட நாடுகளில் உள்ளார்கள். இலங்கையில் மொத்த ஏற்றுமதி வருமானம் 116758 மில்லியன் ரூபாய் ஆகும். இதில் வெளிநாட்டுப பனியாளர்கள் மூலமாக கிடைக்கும் அந்நிய செலாவனி 4.7 விகிதமாகும். நாட்டின் ஏனைய ஏற்றுமதிகள்: உதாரணங்கள் ஆடைத் தொழிற்சாலை 27.4 விவசாயம் “தேயிலை இறப்பர் ஏனையன’ 29.9 வீதமாகும்.

1979ம் ஆண்டு 20ஆயிரத்து 796 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ளார்கள். அவர்களில் 11103 பேர்வீட்டுப்பனிப் பெண்களாவர். 1980ஆம் ஆண்டு 24053 பேர் வெளிநாடு சென்றுள்ளார்கள். அதில் 46 வீதம் வீட்டுப பனிப் பெண்களேயாவார். பதிவு செய்யபபட்ட வெளிநாட்டு முகவர்கள் ஊடாக

சென்றவர்கள் 30 வீதமானவர்களாக இருக்கின்றனர். 2012ம் ஆண்டு 20 இலட்சம் பேர் சென்றுள்ளார்கள். எமது நாட்டு சனத்தொகை 2.5 மில்லியன் ஆகும். இதில் 9.3 வீதமானவர்கள் வெளிநாடுகளுக்கு வேலைகளுக்காகச் செல்வது எமது நாட்டிற்கு பெருமையானதா இழிவானதா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

2012ம் ஆண்டு எமது நாட்டிற்கு கிடைத்த அந்நிய செலாவணி 6.1 பில்லியன் அமெரிகக டாலராகும். இது எமது நாட்டின் உற்பத்தி வருவாயின் 10.5 வீதமாகும். *எமது நாட்டின் முக்கிய பொருளாதார வருவாயாக வெளிநாட்டு வேலை வாய்ப்பின்* வருமானமே உள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்தப் பொழுது விவசாயமே முக்கிய பொருளாதார வழுவாக இருந்தது என்பது குறிபபிடத் தக்கது. வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணிக்காக செல்லும் பெண்களில 90 வீதமாவர்கள் கிராம தோட்டபபுற வறிய விவசாய குடும்பத்தைச் சார்நதவர்களே. இவர்களுக்கு உள்நாட்டில் வேலை வாய்ப்பு இன்மையாலும் விவசாயம் இன்று வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்படுவதாலுமே இவர்கள் தமது வறுமையை போக்குவதற்காக வேறு வழியின்றி வெளி நாடு செல்லும் நிர்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்களின் 50 வீதமானவர்கள அந்நாடுகளில் வன்கொடுமைகளுக்கு உள்ளாகி உரிமை மறுக்கப்பட்டவர்களாக கைவிடப்பட்டவர்களாக தவிப்பதை ஊடகங்களின் வாயிலாக நாளாந்தம் அறிகின்றோம் சமீபத்தில் திருகோணமலையைச் சேர்ந்த ரசீனா நபீக போல எத்தனையோ ஆயிரம் பெண்கள் அநியாய மரணத்தை தழுவிக்கொண்டிருக்கிறார்கள்

சவுதி அரேபியாவில் அனைத்து நாடுகளையும் சேர்ந்தப் பணியாளர்கள் 279 பேர் மரண தண்டனைககாக சிறைச் சாலைகளில் அடைத்து வைக்கபபடடுள்ளது குறிப்பிடத்தக்கது.

மண்ணுக்கும் விண்ணுக்கும் மலையே உயிராகும் மாந்தருக்கும் விலங்குக்கும் அன்பே வாழ்வாகும் - என்றான் ஒரு கவிஞன்.

வீட்டினில் அடைந்து கிடந்த அனைவருக்கும் பணிவிடை செய்து அன்பை பெற்ற நிலைமாறி உலகிலே தாம் கொண்ட வானளாவிய இலட்சியம் வெற்றிப்பெற்றிட வேண்டும் !.

வேலையற்றவர்கள் 30 சதவீதமானவர்களாக இருக்கின்றனர். 2012ம் ஆண்டு 20 இலட்சம் பேர் வேலையற்றவர்கள், எமது நாட்டு சனத்தொகை 2.5 மில்லியன் ஆகும். இதில் 9.3 வீதமானவர்கள், வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் சென்றுள்ளனர். எமது நாட்டின் பொருளாதார இறக்குமதி வருமானம் அதிகரிக்க வேண்டும்.

2012ம் ஆண்டு எமது நாட்டிற்கு கிடைத்த அந்நிய செலாவணி 6.4 மில்லியன் அமெரிக்க டொலராகும். இது எமது நாட்டின் உற்பத்தி வருமானத்தில் 10.5 வீதமாகும். எமது நாட்டின் முக்கிய வருமானமாக கருதப்படும் தேயிலை ஏற்றுமதி வருமானம் உள்ளது. இலங்கைக்கு கிடைக்கும் அந்நிய செலாவணி வருமானத்தில் முக்கிய பொருளாதார வருமான இருப்பது எமது வெளிநாட்டு ஊக்குவிப்பு வேலை வாய்ப்பு பணியகத்தின் தரவுகளின்படி வெளிநாடுகளில் 90 சதவீதமானவர்கள் தொடர்ந்து வறிய நிலைமை குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுக்கு உள்நாட்டில் வேலை வாய்ப்பு இல்லாமையும் அவர்கள் இதற்கு முகம்கொடுக்க நிலையில் வாழவேண்டியுள்ளது. இவர்கள் தமது வறுமையை போக்குவதற்காக வேறு வழியின்றி வெளிநாடு செல்லும் நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்படுகின்றனர். இவர்களில் 50 வீதமானவர்கள் வீட்டுப்பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். உறவை முறித்துக்கொண்டு வருமானம் தேடிச்செல்லும் பெண்களுக்கு கூடுதலான வாய்ப்பினை தாமாகவும் அளிக்கின்றது. வெளிநாடுகளில் தொழில்புரிவோரைக் கவனிக்க பெரிய நிறுவனங்கள் முறையான கொள்கையொன்று இல்லை. பணிப்பெண்கள் அதிகமாக துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர்

எமது அமைப்பினால் அவர்களுக்கு நீதிகோரியும் கோரிக்கை பணியகத்தின் 279 பேர் மாதாந்தம் வெளிநாடுகளில் மரணமடைந்தவர்களின் உடல்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

மக்களுக்கும் விவசாயிகளுக்கும் மலையக உழைக்கும் மக்களுக்கும் விவசாயிகளுக்கும் உதவி வழங்குவதற்கு ஒரு சமூகமான ஒரு தேவை.

எமது நாட்டில் உள்ள பல்வேறு வேலையாட்களுக்கு பயிற்சி அளித்து ஒரு நல்ல உழைப்பாளர்களை உருவாக்கும் வகையிலான ஒரு திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும்.

# மலையகப் பெண்கள் உரிமைகளும் அமைப்பும்

பகுதி -2

# முன்னுரை

ஐக்கிய நாடுகள் சபையின் பெண்களுக்கெதிரான சகல விதமான பாரபட்சங்களையும் விலக்கும் உடன்படிக்கையிலுள்ள சரத்துக்களை (CEDAW) இலங்கை 1981ம் ஆண்டு ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டதன் விளைவாக 1993ம் ஆண்டில் பெண்களின் பட்டயத்தை இலங்கை அங்கீகரித்து வெளியிட்டது.

இப்பட்டயத்தில் விசேட சரத்துக்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. ஆனால் இதன் அடிப்படையில் மலையக மகளிர் பட்டயம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை நாம் உணருகின்றோம். இதற்கு முக்கிய காரணம் என்னவெனில், மலையகப் பெண்கள் பெருந்தோட்டத்துறையில் 50 வீதத்திற்கும் மேலான பங்களிப்பைச் செய்கின்றனர் என்பதும், விசேடமாக கூறுவதானால் குடும்ப வருமானம் முதலாய் இவர்களுடைய பங்களிப்பே கூடுதலாக இருப்பதுமேயாகும். ஆனால் இவர்களுக்கு குடும்ப ரீதியாகவும், வேலைத்தளத்திலும், சமுதாயத்தினாலும், பல உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அத்தோடு இலங்கையைப் பொறுத்த வரையில் கூடுதலாக மௌனக்கலாச்சாரத்தில் வாழும் இப்பெண்கள் மிகவும் அடக்கப்படுகின்றார்கள். இங்கே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஓரங்கட்டப்பட்டுள்ளது. பெண்ணை ஒரு மாண்புள்ள ஆள் என்று பார்க்காமல், பரம்பரையாக வந்த பாரம்பரிய, கலாச்சார எண்ணங்களுக்கு ஏற்பவே அவள் குடும்பத்தாலும் சமூகத்தாலும் உருவாக்கப்படுகிறாள். இதுவரை பெண்ணின் நோக்கில் உலகம் பார்க்கப்படவில்லை. சகல மட்டங்களிலும் அவளது உணர்வுகள் மதிக்கப்படவில்லை.

இதன் அடிப்படையில் தான் லியோ மார்கா ஆச்சிரமம் பல தடவைகள் "பாலினமும் அபிவிருத்தியும்" என்ற தலைப்பில் பல கருத்தரங்குகளை நடாத்தியதன் பயனாக மலையகப் பெண்கள் அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பின் மூலம் பெற்ற கருத்துக்கள் பல இந்தப் பட்டயத்தில் எதிரொலிக்கின்றன. பெண்களுக்கெதிரான அடக்கு முறைகள் தொடர்ந்து நிலவுவதையும், ஆண் – பெண் அடிப்படையிலான வன்செயல்கள், மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் மீறுவதையும் பார்க்கின்றோம். ஆனால் தற்போது எழுந்துள்ள புதிய கருத்து என்னவெனில் "பெண்ணின் பார்வையின் ஊடாக உலகைப் பார்த்தல்" என்பதாகும். அதாவது பொருளாதார, சமூகம், அரசியல், கலாச்சாரம் ஆகியவற்றில் பெண்ணின் எண்ணமும் நோக்கும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதாகும்.

மலையகத்தில் ஆண்– பெண் சமத்துவமின்மையை நீக்குவதற்கான உறுதியான, சட்ட ரீதியான அமைப்பை உருவாக்க இப்பட்டயம் வழிகோலுகிறது. இங்கே எடுத்துரைக்கப்பட்ட உரிமைகள், நெறிகள், கொள்கைகள், எல்லா மனிதர்களாலும் சமூக நிறுவனங்களாலும், ஒழுங்கமைப்புக்களாலும், தொழில் நிறுவனங்களாலும், தொழில் முயற்சிகளினாலும் மதிக்கப்படவும், அவற்றின் செயல்களுக்கு வழிகாட்டவும் வேண்டுமென்று விரும்புகிறோம்.

## மலையகப் பெண்களின் ஒரு சில அடிப்படைப் பிரச்சனைகள்

–பெருந்தோட்டத்துறை, ஆரம்பம் தொட்டு இன்று வரை பால் அடிப்படையிலான வேலைப் பாகுபாடுகளைக் கொண்டிருக்கின்றது .

–பெண்கள் தொழில் முன்னேற்றம் அற்றவர்களாக, தொழில் கல்வி, சுயதொழில் கல்வி அற்றவர்களாக உள்ளனர்.

–குடும்பத்திலும் சமுதாயத்திலும் அவர்களின் பணி அங்கீகரிக்கப்படுவதில்லை.

50 வீதத்திற்கும் அதிகமான பெண்கள் கல்வியறிவு அற்றவர்களாகவும், இந்த அறியாமை காரணமாக சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டு, வலுவற்றவர்களாக உருவாக்கப்பட்டுள்ளார்கள்.

–பரவலான வறுமை, போஷாக்கின்மை, காரணமாக மற்றவர்களில் தங்கி நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

–குடும்பத்தில் தொல்லைகள், வன்முறைகள், கற்பழிப்புக்கள், கட்டாயத் திருமணங்கள், பெண்கள் மீது சில குடும்ப பொறுப்புக்கள் திணிக்கப்படுதல் போன்றவை காரணமாக பெண்கள் முன்னேற்றத்தில் தடைகள்.

–சமயம், அடிப்படை வாதம் இவற்றினால் பெண்கள் ஒதுக்கப்படுதல். விதி, மூட நம்பிக்கை போன்றவற்றிற்கு பெண்கள் அதிகமாக ஆளாகுதல்.

–லயின் அறை வாழ்க்கை முறை காரணமாக குடும்பப் பிரத்தியேகம் பாதுகாக்கப்படாமை.

–தண்ணீர், விறகு போன்றவை தூர இடங்களிலிருந்து கொண்டுவருதல்.

–பிள்ளைகளின் எண்ணிக்கைப்பற்றி பெண்கள் தீர்மானம் எடுக்க முடியாமை.

–தொழில் செய்யும் இடத்தில் போதிய பாதுகாப்பின்மை .

01.

## பகுதி 1

இப்பட்டயம், மலையக மகளிருக்கே தனித்துவமான கோரிக்கைகளை, இலங்கை அரசின் மகளிர் பட்டயத்தின் சம்பந்தப்பட்ட கருத்துக்களுடன் ஒன்றிணைக்கக் கோருவதோடு மலையக பெண்கள் மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் அநுபவிப்பதற்கு, உத்தரவாதம் அளிப்பதுடன், அவர்களுடைய முழுமையான முன்னேற்றத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டுமென அரசாங்கத்தையும், நிர்வாகத்தையும், சமூகத்தையும், சமயப்பெரியார்களையும், தொழிற் சங்கங்களையும், சமூக நிறுவனங்களையும் கோருகின்றது.

02.

## குடியியல் உரிமைகள்

1. சிறீமா – சாஸ்திரி ஒப்பந்தம் (இலங்கை இந்திய ஒப்பந்தம் ) விதிகளுக்குட்பட்ட அல்லது ஏனைய காரணங்களிலான கணவனின் தேசியத்தன்மையை மனைவியின் மீது திணிப்பதில்லை என்று அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும்.

2. ஒன்றிணைந்த குடும்ப வாழ்வைக் கருத்தில் கொண்டு இந்திய கடவுச்சீட்டுப் பெற்றுள்ள ஒரு கணவனின், இலங்கைப்பிரஜையான அல்லது நாடற்றவளான ஒரு மனைவி, தான் தொடர்ந்தும்

இலங்கையில் இருக்க வேண்டும் என விரும்பித் தீர்மானிக்கும் பட்சத்தில் அக்கணவன் இலங்கைப் பிரஜையாக இருக்க அங்கீகாரம் வழங்க அரசு உறுதி செய்ய வேண்டும்.

## 03. கல்விக்கும் பயிற்சிகளுக்குமான உரிமை

பின்வருவனவற்றை உறுதி செய்வதற்கு அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

1.அ) முன் பள்ளி முறையின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு தோட்டப்புறப் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் பிள்ளைகளின் வயதெல்லையை மூன்றாகக்கட்டுப்படுத்தல்.

ஆ) இப்பராமரிப்பு நிலையங்களில் சேவையாற்றும் பராமரிப்பு உதவியாளர்கள் அதே தோட்டத்தில் வசிப்பவர்களாகவோ அல்லது தோட்டப்புறத்தைச் சார்ந்தவர்களாகவோ இருப்பதோடு அப்பிள்ளைகளின் தாய்மொழியை அறிந்தவராகவும் இருக்க உறுதிப்படுத்த வேண்டும்.

2. கல்விப்பொதுத்தராதரத்துடன் கூடிய கல்வித்தகமை, முறைசார் பயிற்சி இவைகளுடனான முன் பள்ளி, ஆசிரியர்கள், விளையாட்டுத்திடல், உட்பட அடிப்படையான தேவைகளை உள்ளடக்கிய முன் பள்ளி உருவாக்கம், ஆசியர்களுக்கான வேதனம் ஆகியவை தோட்டப்புற நலன்புரி நிதியைப் பயன்படுத்தி தோட்ட நிர்வாகத்தினூடாக வழங்கப்படுதல் ஆகியவற்றை உறுதி செய்தல்.

3. ஆரம்ப, இரண்டாம் தர மட்டங்களிலான கல்வி பெறும் வாய்ப்பையும், உரிமையினையும் உறுதி செய்தல்.

4. அரசாங்கம் உட்பட சகல மட்டங்களிலான மலையகக் கல்வி குறித்த புறக்கணிப்பையும் அதனால் ஏற்பட்டுள்ள கல்விப் பின்னடைவையும் கருத்தில் கொண்டு மலையக மக்களுக்கென தனியான தொழில் நுட்ப, தொழிற் பயிற்சிக் கல்லூரிகளை உருவாக்க உறுதி செய்தல்.

5. மலையகத்தில் 13 வருடக்கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப் படுவதை உறுதி செய்தல்.

6. மலையக மாணவர்களுக்கான புலமைப் பரிசில்கள், கல்வி நிதியுதவிகள், ஆகியவற்றிற்கான உரிமையை உறுதி செய்தல்.

7. உடசார் மற்றும் அழகியற் கல்விக்கான பயிற்சி பெறவும் அவற்றில் பங்கேற்கும் வகையிலும் சந்தர்ப்பங்களையும் வழிமுறைகளையும் பெற்றுக்கொள்வதற்கு வழிசெய்தல்.

8. வலது குறைந்த இளம் பெண்கள் கல்வி, பயிற்சி நெறிகள் ஆகியவற்றில் சமத்துவமாகப் பங்குபற்றும் வாய்ப்பினை ஏற்படுத்தல்.

9. மலையகப் பெண்களுக்கிடையே அதிகரித்துக் காணப்படும் கல்வி இடைநிறுத்தம் செய்வோர், ஆரம்பக்கல்வியை மட்டும் பெற்றுக்கொள்வோர் போன்றோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

10. மலிவுத் தொழிற் சந்தை, பாலியல் சுரண்டல், ஆகியவற்றினால் கல்வி இடைநிறுத்தம், ஆரம்பக் கல்வியை மட்டும் பெற்றுக் கொள்வது போன்றோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான. உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

11. மகளிரியல் கல்வியானது இளங்கலை தொடக்கம் முதுகலை வரை சகல மட்டங்களிலும் கொடுக்கப்பட வேண்டும். (ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, சர்வ கலாசாலை).

## தொழில்சார்ந்த நன்மைகள், தனி ஏற்பாடுகள் ஆகியவற்றை பெறுவதற்கான உரிமைகள்

1. பெருந்தோட்டத் துறை சார்ந்த பெண்களின் பின்வரும் அம்சங்களை :

அ) பெண் தொழிலாளர்கள் நியாயமான சுமைகளோடு மலைகளில் ஏறி இறங்கி நீண்ட தூரம் நடக்க வேண்டியுள்ளமை.

ஆ) கடுமையான கால நிலைமைகளை எதிர் நோக்க வேண்டியுள்ளமை.

இ) மேலதிகமாக வீட்டுப் பராமரிப்புச் சுமைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளமை.

ஈ) அதிகமான சந்தர்ப்பங்களில் உடல் ரீதியாக பலவீனமுற்று நோய்களுக்கு உள்ளாகுதல்.

ஆகியவற்றை அவதானத்தில் கொண்டும் தனிப்பட்ட ரீதியிலும் குடும்ப மட்டத்திலும் ஆரோக்கியமான, கௌரவமான வாழ்வினை வாழும் பொருட்டும், தற்போது நடைமுறையில் உள்ள காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை உள்ள வேலை நேரத்தை குறைத்து காலை 7.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரையிலான 8 மணித்தியாலமான வேலை நேரமாக மாற்றி அமைத்தல்.

2. பின்வரும் அம்சங்கள் குறித்து தற்போது நடைமுறையில் இருக்க வேண்டிய சட்ட நியதிகளைக் கிரமமாக நடைமுறைப்படுத்தும் படி அனைத்துத் தோட்ட நிறுவனங்களையும் பணித்தல்.

அ) வேலை செய்யும் இடங்களில் பெண்களுக்கான ஓய்வு எடுக்கும் அறைகளை ஏற்படுத்தல். அவகாசத்தை ஏற்புடுத்தல்.

இ) கொழுந்து நிறுக்கும் இடங்களுக்கு அண்மித்த இடங்களில் கர்ப்பிணிகளுக்கு வேலை வழங்குதல்.

5. பெருந்தோட்டத்துறை சார்ந்த தொழிற்சாலைகளில் பெண்களை இரவு நேரங்களில் வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்தல்.

4. ஆறு மாதங்களுக்கு மேல் நிரந்தரம் ஆக்கப்படாமல் தொழில் புரியும் பெண் தொழிலாளர்களை நிரந்தர தொழிலாளர்களாக தோட்டங்களில் பதிவு செய்தல்.

5. தோட்டத்தில் வதியும் தகமையுடைய 18 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் அனைவரையும் வேலையில் சேர்த்துக்கொள்ளல்.

6. விவாகரத்துச் செய்த அல்லது கணவனை விட்டுப் பிரிந்து வாழும் மனைவிக்கு அவள் வேலை செய்யும் அதே தோட்டத்தில் அல்லது அவளது பெற்றோர் வதியும் தோட்டத்தில் தொடர்ந்தும் வேலை வழங்குவதோடு அப்பெண் தனித்து வாழும் வகையிலான இருப்பிட வசதியை வழங்குதல்.

7. வயது முதிர்ந்த, வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பெண்களில் பலர் நிரந்தரமான, கிரமமான வாழ்க்கைச் செலவினங்களுக்கென வருமானமின்மை காரணமாக கைவிடப்பட்டவர்களாகவும், அநேக சந்தர்ப்பங்களில் காலத்திற்கு முன்னதான மரணத்தைத் தழுவ வேண்டி நேர்வதாலும், ஆண் – பெண் இருபாலாருக்குமான நிரந்தர விதிகளுக்கமைந்த இளைப்பாற்றுக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக தோட்டப்புறப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தினை அமுலாக்கல்.

8. பெண் தொழிலாளரை இரசாயன மற்றும் சூழல் மாசடைதல் ஆகியவற்றால் ஏற்படும் அபாயங்களிலிருந்து காக்கும் பொருட்டுத் தகுந்த சாதனங்களையும் தேவைகளையும் வழங்குதல். மேற் கூறிய அம்சங்களை அரசு உறுதி செய்ய வேண்டும்.

## 05. பொருளாதர நடவடிக்கைகளில் ஈடுபடவும் அவற்றிலான நன்மைகளைப் பெறவும் உள்ள உரிமைகள்

1. பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்தல் வேண்டும். ஓய்வு பெறுதல், வேலையற்றிருத்தல், நோய்வாய்ப்பட்டிருத்தல், முதிர்வயது எய்தல் காரணமாக அல்லது வேலை செய்ய முடியாமல் செய்யும் வேறு காரணிகள் காரணமாகப் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தேவையான சமூகப்பாதுகாப்பிற்கான உரிமை.

2. குழந்தைப்பராமரிப்பு, குடும்பக் கடமைப்பாடுகளைப் பூர்த்திசெய்யவேண்டிய அல்லது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு காரணங்களுக்காக விடுமுறை பெறுவதற்கும், அந்த விடுமுறை காலாவதியான பின்னர் வேலைக்குத் திரும்பி வருவதற்குமான உரிமை.

3. ஓய்வு பெறும் போதும் வேலையற்ற நிலையிலும் நோயுற்றிருக்கும் போதும் முதுமையிலும் வேலை செய்ய இயலா நிலையிலும் சமூகப் பாதுகாப்புப்பெறும் உரிமை.

4. நாட்டில் நடைமுறையிலுள்ள தொழிற் பாதுகாப்புச் சட்டங்கள் தோட்டப்புறங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல்.

5. ஒரு பெண் பெற வேண்டிய ஊதியம், சம்பளம், வேறு நன்மைகள், அல்லது கொடுப்பனவுகள் அப்பெண்ணிற்கே நேரடியாக வழங்குவதை உறுதிப்படுத்தல்.

6. தோட்டப்புறத்தைச் சார்ந்த 18 வயதிற்குக் குறைந்த எந்தவொரு பெண்ணும் வீட்டு ஊழியத்திற்கோ, ஏதாவதொரு கைத்தொழில் துறையிலோ அல்லது வர்த்தக நிறுவனங்களிலோ வேலைக்கு அமர்த்தப்படலாகாது என்பதை உறுதி செய்தல்.

7. அ) துண்டுதல் ரீதியிலான மதமாற்றம் அல்லது
   ஆ) பாலியல் அல்லது வேறுவிதமான துஷ்பிரயோகங்கள் ஆகியவற்றிலிருந்து இளம் பெண்களைப் பாதுகாக்கும் முகமாக தோட்டப் புறத்தைச் சார்ந்த பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை பெறுவதற்குப் பதிலாக எமது நாட்டில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

8. தோட்டப்புற இளம் பெண்களின் நன்மை கருதியும், அவர்கள் ஏனையவர்களில் தங்கியிருப்போராகவாழும் நிலையைத் தடுக்கவும் விரும்பத்தகாத நடவடிக்கைகளின் செல்வாக்குகளுக்கு உட்படுவதைத் தடுக்கவும் அவர்களுக்குப் போதிய வேலை வாய்ப்புகள், சுய தொழில் வாய்ப்புகள், வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றை அரசு உறுதிப்படுத்தல்.

9. குடியிருப்பிற்கான காணியின் சொத்தாண்மையும், அவற்றிற்கான உறுதிப் பத்திரங்களின் உரித்தும் பெண்களுக்கும் சமமாகக் கிடைக்க உறுதி செய்யப்படல் வேண்டும்.

10. வீட்டுத் தலைமைக்குரித்தானவர் என்ற பதம் ஆண் – பெண் இருபாலருக்கும் சமமாகப் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

11. தோட்டப்புறம் சார்ந்த அரசாங்க, தனியார் துறைகளிலான இடைமட்ட, நடுத்தர வேலை வாய்ப்புகளில் தோட்டப்புறம் சார்ந்த படித்த இளம் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.

## சுகாதாரக் கவனிப்புக்கும் போஷாக்குக்குமான உரிமை

பின்வருவனவற்றை அரசு உறுதி செய்ய வேண்டும் :–

1. தோட்டப் புறப் பெண்கள் உடல் உள ரீதியான, சுகாதார மேம்பாட்டிற்கான வேலைத் திட்டங்களைப்பெற்றுக் கொள்ளும் வகைகளையும் உரிமைகளையும் அரசு ஏற்படுத்திக் கொடுத்தல்.

2. குறைந்த பட்சம் தோட்டப்புறம் சார்ந்த பயிற்றப்பட்ட ஒரு பெண் மருத்துவ உதவியாளரை

உள்ளடக்கியும், தகுதிவாய்ந்த மருத்துவரைக் கொண்டதுமானதாக தோட்டப்புற மருத்துவசாலைகளைதரம் உயர்த்தல்.

3. கர்ப்பகாலம், பிரசவ காலம், பிரசவத்திற்கு பின்னுள்ள காலம் தொடர்பாகக் கிடைக்கக்கூடிய உயர் தரத்திலான கவனிப்பை ஏற்பாடு செய்தலும், அவசியமானவிடத்து சமூகப் பாதுகாப்புக்களையும், சேவைகளையும் அளித்தல்.

4. நாட்டின் ஏனைய பாகங்களிலும், அரசாங்க, தனியார் துறைகளிலும் கிடைக்கப்பெறும் பிரசவ நன்மைகளுக்குச் சமமான, குழந்தை பிறப்பதற்கு முன்னும் பின்னும் கிடைக்கக்கூடிய பிரசவ காலநன்மைகள் தோட்டப்புறப் பெண்களுக்கும் கிடைக்கப்பெறச் செய்தலும் அதற்கு இயைவாக பிரசவகால சட்டவாக்க விதிகளில் தேவையான திருத்தங்களைச் செய்தலும்..

5. குடும்பத்திட்டம் என்ற போர்வையில் தற்போது மேற்கொள்ளப்படும், தூண்டுதல் பேரிலும் கட்டாயத்தின் பேரிலுமான குடும்பக்கட்டுப்பாட்டு அறுவைச்சிகிச்சை முறையை விசேட சட்டவிதியின் கீழ் உடனடியாக தடை செய்தல்.

6. இத்தகைய தூண்டுதல், கட்டாய முறையிலான குடும்பக்கட்டுப்பாட்டு சத்திர சிகிச்சைக்காக இளம் தாய்மாரை ஆட்சேர்த்தல் பொருட்டு எல்லா மட்டங்களிலும் இடம் பெறும் தரகு முறையை உடன் நிறுத்துவதற்கு ஆவன செய்தல்.

7. இனவிருத்தியை பெண்கள் தாங்களே நிர்ணயிக்கும் உரிமையை அங்கீகரித்து பாதுகாப்பான குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்த ஏற்பாடு செய்தல் உட்பட குடும்பக் கட்டுப்பாடுசம்பந்தமான தகவல்கள், கல்வி, அறிவுரைகள், சேவைகள் சமமாகப்பெண்களுக்கும் கிடைக்கச் செய்தலுடன் அவர்களின் பாதுகாப்பு சம்பந்தமான விதிமுறைகளை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றை மலையகப் பெண்கள் இடையே அவர்கள் தெரிந்து பின்பற்றும் வகையில்நடைமுறைப்படுத்தல் .

8. வயது முதிர்ந்த பெண்களுக்கான இல்லங்கள், வலது குறைந்தவர்களுக்கான நலன் பேணும் நிலையங்கள் ஆகியவற்றைத் தோட்ட மக்களின் தேவை கருதி நிறுவுதல்.

## குடும்பத்தினுள் இருக்கும் உரிமைகள்

1. திருமணம், குடும்ப வாழ்க்கை சம்பந்தமாக எழும் பெண்களுக்கெதிரான சகலவிதமான ஓரங்கட்டல்களை இல்லாமல் செய்யும் பொருட்டு எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதோடு பின்வரும் அம்சங்களையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

அ) ஆதனங்களின் சொத்தாண்மை, கொள்ளுதல், முகாமை, நிர்வாகம், துய்ப்பு, கையுதிர்ப்பு தொடர்பாக கணவனுக்கும் மனைவிக்கும் ஓரே உரிமை.

ஆ) தமது பிள்ளைகளின் எண்ணிக்கை, பிள்ளைகளுக்கிடையிலான கால இடைவெளி என்பவற்றை சுதந்திரமாகவும் பொறுப்புணர்வுடனும் தீர்மானிப்பதற்கும் இந்த உரிமைகளைப் பிரயோகிப்பதற்குமான தகவல்கள், கல்வி அறிவு, வழிமுறைகள் ஆகியவற்றை பெறுவதற்குமான சமத்துவமான உரிமை.

இ) 1. திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது 18 என அரசால் பிரகடனப்படுத்தப்பட்ட சட்டம் அமுலாக்கப் படவேண்டும் என்பதுடன், அந்த சட்ட மூலத்தைப் பிரசித்தப்படுத்துவதற்கும் இந்த வயதெல்லைக்குக் குறைந்தவர்களின் ஒன்று சேர்க்கை பயனுறுத்தப்பட்டிருக்குமிடத்து அவ்வாறு ஒன்றிணைந்தவர்களைப் பாதுகாக்கும் வகையில் அத்தகைய ஒன்று சேர்க்கையை ஒரு குறிப்பிட்ட இடைக்காலப் பகுதிக்கு பதிவு செய்வதற்கும் அரசு விசேட நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

2. உத்தியோகபூர்வ திருமண பதிவிற்கான திருமணப் பதிவு உத்தியோகத்தராக தோட்டப்புறத்தைச் சார்ந்த ஒருவரை அல்லது தோட்டப்புற மக்களின் மொழியை நன்கு அறிந்த ஒருவரை நியமிக்க ஆவன செய்தல் வேண்டும்.

## சமூக ரீதியான ஓரங்கட்டலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் சமூக பாதுகாப்பை பெற்றுக்கொள்வதற்குமான உரிமை

1. தோட்டப்புறங்களில் உள்ள பெண்கள், தோட்டங்களிலும், வெளியிலும் அரசாங்க, தனியார் துறைஸ்தாபனங்களிலும், அமைப்புக்களிலும் உரிய அங்கீகாரத்தையும் கௌரவத்தையும் பெறும் வகையில் அரசு உறுதிப்படுத்தல்.

2. விதவைகள், மணவிலக்குப்பெற்ற பெண்கள், தனிப்பெண்கள் அல்லது வேறு பாதிப்புறக்கூடிய வகையினருக்கு சமூக பொருளாதார நடவடிக்கைகளில் இருந்து ஓரங்கட்டப்படாது இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல்.

3. மேலும் அநேக பெண்கள் சமூகத்தின் பிரதான ஓட்டத்தில் பங்கேற்று தமது பணிகளை ஆற்றுவதற்கான நடவடிக்கைகளுக்கு உத்தரவாதம் அளித்து, தேசிய மட்டத்திலான இதுவரை அநுபவித்து வந்த ஓரங்கட்டலில் இருந்து விடுபடும் வகையில் விளையாட்டுத்துறை, தேசிய மட்ட நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் சமங்கு கொள்ளும் வகையிலான சேவைகளையும் நடவடிக்கைகளையும் வழங்கல்.

## 09. பாலின ரீதியான வன்செயல்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை

1. பொருளளவிலான சட்டத்தின் பிரகாரம் மாத்திரமன்றி இத்தகைய வன் செயல்களினால் பாதிக்கப்படும் பெண்களின் உரிமைகள், பரிகாரங்கள் ஆகியவற்றைத் தெளிவாக அங்கீகரிக்கும் தடுப்புமுறைகளையும் தண்டனைமுறைகளையும் உள்ளடக்கிய சட்டத் திருத்தங்களை அறிமுகப்படுத்தி அமுலாக்கல்.

2. வீட்டு மட்டத்திலும் வேறு இடங்களிலும் அத்தகைய துஷ்பிரயோகங்கள், வன்செயல்களுக்கு உள்ளாகும் பெண்களுக்கு உதவும் வகையிலும் வழிகாட்டல் அமைப்புக்களை மலையகத்தில் ஊக்குவித்தல்.

3. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவு, ஆலோசனை, நடைமுறைப்பிரதியீடுகளை வழங்கும் அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகளுக்கும் சமூக ரீதியான ஒழுங்கமைப்புகளுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் ஆதரவு வழங்கல்.

மலையக மக்களினதும், இளம் வயதினரினதும் பிரத்தியட்சமான பிரச்சனைகள், அவர்கள் மீதான வன்முறைகள், ஓரங்கட்டல், உரிமை மறுப்பு, தனிமைப்படுத்தப்பட்ட சமூகப் பின்னடைவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசு;

1. தோட்டத்திற்கு உள்ளேயும், அவர்களின் வதிவிடங்களுக்கு வெளியேயும் மலையகப் பெண்கள் இன ரீதியான ஓரங்கட்டப்படுவதிலின்றும் காப்பாற்றப்படுவதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

2. அ) ஒரு பிள்ளை முறையற்ற பாலுறவு, பிள்ளை வாணிபம், பாலியல் சுரண்டல் ஆகியவற்றிற்கு உட்படுவதைத் தடுக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தினால் 1995ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கொண்டுவரப்பட்ட இலங்கை தண்டனைக்கோவையில் பிரதான திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

   ஆ) தண்டனைக் கோவையில் மேற்குறித்த சரத்து தோட்டப்புறச் சிறார்களை வேலைக்கு அமர்த்தும், பெண்பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தும் நடைமுறையை தடைசெய்யும் வண்ணம் உரிய விதிகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

   இ) இலங்கையில் எப்பகுதியிலேனும் தோட்டப்புறங்களில் இருந்து 16 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளை, வீட்டு வேலை, வீட்டுப் பராமரிப்புகளுக்கு அமர்த்துதலைத் தண்டனைக்குரிய குற்றமாக ஏற்கும் சட்டரீதியான ஏற்பாடுகளைச் செய்தல்.

3. பெண்கள், விதவைகள், விலக்கி வைக்கப்பட்டோர், விவாக விலக்கலில் இருப்பவர், நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டோர் ஆகியோருக்கு புகலிடம், தங்கும் வசதி அளிக்கும் வகையில் ஒவ்வொரு தோட்ட கொத்தனிகளுக்கும் தனியான குடியிருப்பு அலகுகளை ஒதுக்க நடவடிக்கை எடுத்தல்.

4. பெண்களுக்கெதிரான சகலவிதமான துஷ்பிரயோகங்கள், ஓரங்கட்டல், நீதி வழுவல்கள் ஆகியவற்றில் இருந்து அவர்களைக்காக்கும் வண்ணம் தோட்டங்கள் தோறும் பாதுகாப்பு, ஆலோசனைக் குழுக்கள்அமைக்கப்படுவதோடு, அக்குழுவின் நடவடிக்கைகள் அரசாங்க அமைப்புகள், மற்றும் தோட்ட நிறுவனங்கள் ஆகியவற்றால் அங்கீகரிக்கப் படவும் அரசு ஆவன செய்தல் வேண்டும்.

## பகுதி 2

## மலையகப் பெண்கள் அமைப்பை ஏற்படுத்துதல்.

1. இப்பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடப்பாடுகள், அவற்றை அடையும் வழிமுறைகள், அப்படி அடைவதிற் கண்ட முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்தல், குறிக்கோள்கள் செவ்வனே நடைப்பெறுவதைக் கண்காணிப்புச் செய்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான மலையக மட்டத்திலான மலையக பெண்கள் அமைப்பு குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

இத்தகைய குழுவில் அங்கத்தவர்களாக ஆவதற்கான விதிகள் பின்வருமாறு அமைதல் வேண்டும் :-

அ) குழு 15 அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்பாக இருத்தல் வேண்டும்.

ஆ) அத்தகைய அங்கத்துவம் பின்வரும் பிரிவினரை பிரதிநிதித்துவப்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

1. பெண்களிடையே மலையகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தகமையாளர்.
2. மலையகப் பின்னணியைக் கொண்டு பின்வரும் துறைகளில் தனித்துவமடைய பாட்டாளி அறிவுஜீவிகள் (Organic Intelectuals) அங்கத்துவம் வகிக்க வேண்டும்.

* சுகாதாரம், போஷாக்கு
* நெறிசாரா, நெறிசார் கல்வி
* பொருளாதார அபிவிருத்தி
* சுற்றாடல்
* சட்டமும் அமுலாக்கலும்
* சமூக ஆய்வும் அபிவிருத்தியும்
* விளையாட்டு பொழுது போக்குத் துறைகள்.

இ) குழு தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கொண்டதாக இருக்கும். தலைவரும் பொருளாளரும் குழு அங்கத்தவர்களால் தெரிவு செய்யப்படுபவர்களாகவும் செயலாளர் தெரிவு செய்யப்படுபவராக அல்லது நியமிக்கப்படுபவராகவும் இருக்கலாம். ஆனால் அத்தகைய நபர் குழுவின் பெரும்பான்மை அங்கத்தவர்க்கு ஏற்புடையவராக இருத்தல் வேண்டும்.

2. குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்.

அ) ஓரங்கட்டல்கள், வன்செயல்கள், பட்டயத்தில் குறிப்பிட்டுள்ள உரிமைகள், அத்துமீறல்கள், நிவாரணங்கள் சம்பந்தமான அல்லது அதன் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்று அவதானித்து பரிசீலனை செய்து இயைவான நிர்வாக அதிகாரிக்கோ, அமைப்புகளுக்கோ அல்லது நபருக்கோ உரிய நடவடிக்கை கருதி அனுப்பி வைத்தல்.

ஆ) இப்பட்டயத்தில் உள்ள ஏற்பாடுகள், மீறல்கள் குறித்து சட்ட உதவி பெறுவதாகவும் அத்துடன் மத்தியஸ்த்த சேவைகளுக்காகவும் அரச ஒழுங்கமைப்புகளுக்கோ அல்லது நபருக்கோ உரிய நடவடிக்கை கருதி அனுப்பி வைத்தல்.

இ) அவற்றின் அமுலாக்கல், விளைவுகள் தொடர்பாகவும் மேலதிக கட்டுப்பாடுகளை நிறைவேற்றல்.

ஈ) மலையகப் பெண்கள்

1. சமுதாய, பொருளாதார மேம்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
2. அத்தகைய நடவடிக்கைகள், பட்டயத்தில் அடங்கியுள்ள பெண்களின் உரிமைகள் பொறுப்புடைமைகள் மீதான அனைத்து சட்டவாக்க கொள்கையினதும் தாக்கங்களை மதிப்பீடு செய்வதும் அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதலும்.

குழுவின் நடைமுறை விதிகள்

1. அ) குழுவின் ஏதாவது ஒரு கூட்டத்திற்கான நடப்பெண் 7 ஆக இருக்க வேண்டும்.

ஆ) அவசியப்படும் பட்சத்திலும் ஆகக்குறைந்து 2 மாதங்களுக்கு ஒரு முறையும் குழுவின் அங்கத்தவர்கள் கூடுதல் வேண்டும்.

இ) உரிய முறையில் சமர்ப்பிக்கப்படும் கடித மூலம் ஒரு அங்கத்தவர் பதவி நீங்கலாம்.

ஈ) குழு அங்கத்தவரின் அங்கத்துவ தகுதி 3 வருடங்களின் பின்னர் ஒரு அங்கத்தவர் மீண்டும் தெரிவு செய்ய உரித்துடையவராதல்.

உ) குழுத்தலைவர், நிதியாளர் ஆகியோரின் பதவிக் காலம் 3 வருடங்களாக அமைதல். அக்காலம் முடிய மீண்டும் அதே நிலைக்கு அல்லது குழுவின் வேறு

ஒரு நிலைக்கு தெரிவு செய்யப்பட உரித்துடையவராதல்.

ஊ) செயலாளரின் பதவிக்காலம் அவரது நியமனத்தின் அல்லது தெரிவு செய்யப்பட்டதிகதியிலிருந்து 3 வருடங்களாக அமையும். இப்பதவிக் காலத்திற்குள் அமைப்பின் பணிப்புரையின் பேரிலேயோ அல்லது பெரும்பான்மையினரின் பிரேரணையின் மூலமும் செயலாளரின் மீது ஒழுங்காற்று விசாரணையும் நடவடிக்கையும் எடுக்கப்படலாம். சபையின் 2/3 அங்கத்தவர்களின் அநுசரணையுடன் செயலாளரின் பதவிக்காலம் முடியும் முன்னரே ஒழுங்காற்று நடவடிக்கையின் மூலம் அவர் அப்பதவியிலிருந்து விலக்கப்படலாம்.

2. குழு முழு நேரம் கடமையாற்றும் அங்கத்தவரிடையில் இருந்து தெரிவு செய்யப்படும், அல்லது நியமிக்கப்படும். முழு நேரப் பணிப்பாளரின் கீழ்ப் பணியாற்றும் தொகுதியினரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பெண்களின் அந்தஸ்தை உயர்த்தும் முக்கிய சம்பவங்கள் – இலங்கை

| வருடம் | சம்பவம் |
|---|---|
| 1927 | முதலாவது பெண்களுக்குரிய அரசியல் குழு உருவாக்கம். (பெண்கள் குடி உரிமைச் சங்கம்) |
| 1930 | கிராமிய பெண்களுக்கான முதலாவது பெண்கள் சங்கத்தின் உருவாக்கம். (மகிலா சமித்தி) |
| 1931 | சர்வசன வாக்குரிமை அறிமுகம். ஆண்களுக்கும், பெண்களுக்கும் சம வாக்குரிமை. |
| 1931 | முதலாவது பெண் பிரதிநிதி சட்டசபைக்குத் தெரிவாகுதல். (திருமதி அடலின் மொலமுரே). |
| 1937 | ஒரு சட்டமூலம்: நிலச்சுரங்கங்களில் பெண்கள் தொழில் செய்வதைத் தடை செய்தல். |
| 1939 | ஒரு சட்டமூலம்: பிரசவ நலன்களை அறிமுகம் செய்தல். |
| 1945 | ஆரம்ப நிலையிலிருந்து பல்கலைக் கழகம் வரைக்கும் இலவச கல்வியின் அறிமுகம். |
| 1955 | பொலிஸ் திணைக்களத்துக்கு பெண்கள் ஆட்சேர்ப்பு. |
| 1956 | முதலாவது பெண் அமைச்சரின் நியமனம். (திருமதி. விமலா விஜயவர்தனா). |
| 1956 | ஒரு பாராளுமன்ற சட்டத்தின் மூலமாக வேலை செய்யும் பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை அங்கீகரித்தல். |
| 1960 | முதலாவது பெண் பிரதமரைத் தெரிதல். (திருமதி. சிறிமா. ஆர். டி. பண்டார நாயக்கா). |
| 1962 | முதலாவது பெண் உயர் ஸ்தானிகரை நியமித்தல். (திருமதி லொறைன் செனவிரட்ன) |

1963 முதல் தரமாக பெண்களை இலங்கை நிர்வாக சேவையில் ஒரு பகிர்வு முறையில் அனுமதித்தல் .

1963 முதல்தரமாக கணக்காளர், சிறாப்பர், சேவைக்கு பெண்களை அனுமதித்தல்.

1975 ஐக்கிய நாட்டு சர்வதேச பெண்கள் ஆண்டின் கோரிக்கைக்கிணங்க நிர்வாக சேவைக்கு அனுமதிப்பதில் பெண்கள் பங்கை 25% ஆக உயர்த்தல்.

1978 பெண்களின் முன்னேற்றத்திற்காக இலங்கை பெண்கள் நிறுவனத்தை ஒரு தேசிய ஸ்தாபனமாக அமைத்தல்.

1979 முதல் தரமாக மஜிஸ்ரேட் ஆகவும், நீதி மன்றங்களில் நீதி பதிகளாகவும் பெண்களை நியமித்தல்.

1979 முதல் தரமாக ஆயுதப்படை சேவைகளுக்கு பெண்களின் ஆட்சேர்ப்பு.

1980 நிர்வாக கணக்காளர், சிறாப்பர் சேவைகளுக்கு பெண்களின் ஆட்சேர்ப்புக்களில் இதுவரை அமுலில் இருந்த பங்கு முறையை ஒழித்தல்.

1981 பெண்களுக்கெதிரான சகல பாகுபாடுகளையும் நீக்குவதில் ஐ. நா. மாநாட்டின் தீர்மானத்தை உறுதிப்படுத்தல்.

1982 இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் பால் ரீதியான சகல பாகுபாடுகளையும் நீக்குவதற்குரிய தீர்மானத்தைச் சேர்த்தல்.

1983 ஒரு பாராளுமன்ற சட்டத்தின் மூலமாக பொது சேவையிலுள்ள பெண்கள் இறந்தபின் அநாதைக் குழந்தைகளுக்கும், கணவருக்கும் ஓய்வூதிய கொடுப்பனவு ஏற்பாடு செய்யப்பட்டது.

1984 ஊதிய சபையினால் பால் ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சில துறைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளங்களில் உள்ள வேறுபாடுகளை நீக்குதல்.

1984 ஓய்வறை வசதி மற்றும் மேற்பார்வையாளர் ஒருவரின் சமுகத்துடனும் மாதத்தில் 10 நாட்களுக்கு மேற்படாமல் பெண்களை இரவு நேரங்களில் வேலை செய்வதற்கு அனுமதித்தல்.

1985 தனியார்துறை ஊழியர்களுக்கும் முதல் இரண்டு உயிர் பிறப்புகளுக்கு 84 வேலை நாட்களுக்கு பிரசவ விடுமுறையை அனுமதித்தல்.

1992 தனியார்த்துறை ஊழியர்களால் அனுபவிக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட மகப்பேற்று நலன்களை பொதுத்துறை ஊழியர்களுக்கும் அளித்தல்.

1993 சம வேலைக்கு சமஊதியம் என்ற சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தீர்மானத்தை உறுதிப்படுத்தல்.

1993 முதல் இரண்டு கருத்தரித்துள்ள காலங்களில் அவர்களுக்கு 5 வது மாதத்திற்கு பின் ஒரு நாளைக்கு ஒரு மணித்தியால விடுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1993 பெண்களின் சாசனத்தை ஏற்றுக்கொண்டதும் அனுமதித்ததும்.

1993 பெண்களின் சாசனத்தை கண்காணிக்கவும், அமுலாக்கவும் மேன்மை தங்கிய ஜனாதிபதியால் ஒரு தேசிய குழுவை அமைத்தல்.

1994 முக்கியமாக பெண்கள் சம்பந்தமான குறைகளை கவனிப்பதற்காக பொலிஸ் நிலையங்களில் பெண்கள் பிரிவு ஒன்று ஸ்தாபித்தல்.

1994 நிர்வாக மட்டத்தில் அதி உயர்பதவியில் முதலாவதாக ஒரு பெண்ணை அமைச்சொன்றின் செயலாளராக நியமித்தல்.

1994 இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசிற்கு முதலாவது பெண் ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டது (திருமதி. சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க).

## பெண்கள் அந்தஸ்தை உயர்த்திய முக்கிய சம்பவங்கள் – வெளிநாடுகளில்

| வருடம் | சம்பவம் |
|---|---|
| 1400 – 1879 – | பெண் விடுதலை மொழிவாரியாக ஏற்பட்டது. |
| 1792 – | பெண்ணுரிமைக் கொள்கை நிறுவிடு , A vindication of the rights of women - Mary Walston Graft. (1759 – 1797) களில் எழுதிய இந்நூலில் பெண் விடுதலை, பெண் கல்வி, பெண்களுக்கு சட்டத்தில் தகுந்த வாய்ப்பு,பெண் ஓட்டுரிமை, பெண் சொத்துரிமை,பெண் வேலை வாய்ப்பு என்று புரட்சிகரமான கருத்துக்கள். |
| 1830 – | முதல் அலை, பெண்கள் ஓட்டுரிமைக்கான போராட்டங்கள். |
| 1840 – 1848 – | அமெரிக்காவில் நியுயோர்க் நகரில் உள்ள செனக்காபல்ஸ் என்னுமிடத்தில் இடம் பெற்ற மாநாடு . உலக பெண்ணியல் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். |
| 1852 – | மார்ச் மாதம் 8ம் திகதி நியுயோர்க் நகரில் ஆடைத்தொழிற்சாலையில் சுமார் |

40,000 பெண்கள் வேலை நிபந்தனைகளை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்தார்கள்.

1860 – ஜோன் ஸ்டுபர்ட் மில் (1806 – 1873) பெண்ணடிமை நிலை The subjection of women.
இதில் பாலியல் பாகுபாடு சட்டப்படி அழிக்கப்பட வேண்டும். பெண்ணடிமைத் தனம் கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டும் எனக்கூறப்பட்டது.
(Feminine Mystique) இவர் பெண்ணியம் என்பது மனித உரிமைகள் என்பதை கொள்கையாகக் கொண்டிருந்தார்.

1879 – 1889 வரையும் Womenism என்ற சொல் பாவிக்கப் பட்டது.

1890 – Feminism – பெண்ணியம்: இச்சொல் பெண்ணின் உரிமைப்பிரச்சனையையும் அதன் அடிப்படையிலான உரிமைப் போராட்டத்தையும் உணர்த்தப் பயன் பட்டது.

1908 – நியூயோர்க் நகரில் பெண்கள் சம்பள உயர்வு, பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து தெரு ஊர்வலம் செய்தார்கள்.

1909 – அதே நகரில் தையல் பெண் தொழிலாளர்கள் இரண்டு மாத வேலை நிறுத்தத்தில் பலர் கைது செய்யப்பட்ட போதிலும் கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டன.

1910 – ஆகஸ்ட் மாதம் கோப்பன்கேகன் நகரில் சர்வதேச பெண்கள் சோஷலிச அமைப்பு கூட்டம் நடத்தியது. அதில் வருடாந்தம் மார்ச் மாதம் 8ம் திகதி சர்வதேச பெண்கள் தினமாக அநுஷ்டிக்கப்பட வேண்டுமென முடிவு செய்யப் பட்டது.

1918 – 30 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஓட்டுரிமை அங்கீகரிக்கப் பட்டது.

1920 – முழு அமெரிக்காவிலும் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப் பட்டது.

1921 – பெட்டி ஃப்ரைடன் (Betty Friden) பெண்ணியல்பு புதிலர் நிலை.

1928 – இங்கிலாந்தில் பிரிட்டனின் 21 வயது வந்த ஆண்களுக்கும், பெண்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.

1949 – சைமன் டீ பெவாயர் (Simon de Beauvior) இரண்டாம் பால் என்ற நூலில் ஆண் பெண் இரு பாலாரும் சமத்துவம் என்ற கொள்கையை

நடைமுறையில் காண்பித்தார்.

1963 – அமெரிக்காவில் சம சம்பள மசோதா நடைமுறைப்படுத்தப்பட்டது. (ஜான் எவ் கென்னடி ) John f. Kennedy.

1970 –கெட் மில்லட்டின் பாலியல் அரசியல் (Sexual Politics). இது ஆண் – பெண் இரு பாலாருக்குமிடையேயுள்ள அதிகார உறவு முறையை எடுத்து ரைக்கின்றது.

1975 – ஐக்கிய நாடுகள் சபை மார்ச் மாதம் 8ம் திகதியை சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாட முடிவு செய்தது.

1975– 1985 பெண்கள் தசாப்தமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

1977 – ஐக்கிய நாடுகள் சபை வருடந்தோறும் ஏதாவது ஒரு நாளை பெண்கள் உரிமைகள் தினமாகவும், சர்வதேச சமாதான தினமாகவும் அங்கீகரிக்க வேண்டுமெனத் தீர் மானம் எடுத்தது.

1980 – இரண்டாவது சர்வதேச மகளிர் மாநாடு டென்மார்க்கில் கொர்பன் கேகன் நகரில் நடைபெற்றது.

1985 – மூன்றாவது சர்வதேச மகளிர் மாநாடு கென்னியா நாட்டில் நைரோபி நகரில் நடைபெற்றது. இதில் எடுத்தாளப்பட்ட மையப் பொருள் பெண் சமத்துவம், முன்னேற்றம் சமாதானம் ஆகியனவாகும்.

1995– நான்காவது சர்வதேச மகளிர் மாநாடு சீனாவில் பீக்கிங் நகரில் நடை பெற்றது.

